


# உலகத் தமிழர் தத்துவ மாநாடு

# THE WORLD TAMIL PHILOSOPHY CONFERENCE






## ஒக்ஸ்வேர்ட் தமிழ்க் கல்வி கலைகளுக்கான மையம்

## OXFORD CENTRE FOR TAMIL EDUCATION & FINE ARTS



Veena's
w.veenas.com
Quality! Variety!! Satisfaction!!!
CASH & CARRY
BFC
Worldwide money transfer
bureau de change
Halal Butchers
GLISH & TROPICAL FOODS
FRESH FRUITS & VEGETABLES
FROZEN FOODS
Veena's
at
BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்





திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 24வது குருமகாசன்னிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக

பரமாச்சாரிய சுவாமிகள்

# அருள் வாழ்த்துரை

ஊந்திச் சுழியி னுடனேர் பிராணனைச்
சிந்தித்து எழுப்பிச் சிவமந் திரத்தினால்
முந்தி முகட்டின் நிறுத்திய பானனைச்
சிந்தித்து எழுப்பச் சிவன் அவன் ஆமே

வானநாடனாய் வழித்தணை மாமருந்தாய் அடியவர்க்கருளும் கோமுக்தீஸ்வரர் எழுந்தருள் பாலிக்கும் திருவாவடுதுறை திருக்கோயிலின் வாயுமூலையில் ஞானசாமதி கொண்டருளும் திருமூலதேவ நாயனார் அருளிய செந்தமிழ் ஆகமமாம் திருமந்திரப் பெருநூலின் சித்தாந்த சைவ நுண்பொருள் தன்மையையும், அது காட்டும் வாழ்வியல் நெறிகளையும் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் திருமந்திர மாநாடுகள் பல நடத்தியும், பஞ்சாட்சரதீப உரை எனும் அரிய விளக்கத்துடன் ஆதீன வெளியீடுகளாகத் திருமந்திர நூல் முழுதும் பல்வேறு பதிப்புக்களாக வெளியிட்டு வருவதும், திருமூலர் ஐதீக விழாவினைத் திருக்கோயில்களில் நடாத்தி வருவதும், திருமூலரின் குருபூசைத் திருநாள் (ஐப்பசி – அசுவதி) திருமந்திர முற்றோதலுடன் சிறப்பு வழிபாடு சீர்பெற நிகழ்வுறுதலும் சைவநல் உலகம் நன்கறியும்

ஒன்றே குலம் ஒருவனே தேவன்
யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
எனும் திருமூலரின் உயர்ந்த சிந்தனையை உலகறியச் செய்து மானிடராய் பிறந்தோர் அனைவரும் உடலாலும் உள்ளத்தாலும் உயர்நிலை எய்திட முயல்வதே பிறவிப்பயன்.

அத்தகைய அரிய முயற்சியில் தமிழக அரசின் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தலைப்பட்டு, திருமந்திரமும் வாழ்வியலும் எனும் ஓராண்டுப் பட்டப்படிப்பை நடாத்தியமை பாராட்டிற்குரியது.

இப்பயிற்சி வகுப்பில் பங்கேற்ற மாணவர்களும், பொறுப்பாளரும், இம்மை மறுமை நலன்களை நிறைவுறப்பெற்று நீடுநல்வாழ்வு எய்திடவும் நமது ஆத்மார்த்த மூர்த்திகளாகிய ஸ்ரீஞானமா நடராஜப் பெருமானின் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

# அணிந்துரை



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் **திருமந்திரமும் வாழ்வியலும்** என்னும் பட்டயக் கல்வி இலண்டனில் மிகச்சிறப்புடன் நடத்தி முடிக்கப்பட்டுள்ளமை தமிழுக்கும் தமிழக அரசுக்கும் நிறுவனத்திற்கும் மிகுபெருமை சேர்த்துள்ளது. இப்பட்டய வகுப்பு தொடங்குவதற்கு அடிகோலிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழ்ச் சமுதாயத்திற்கும் தமிழுக்கும் வழங்கிய கொடைகள் குன்று சிகரங்களாக வரிசைக்கட்டி நிற்கின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர் தமிழாய்வுக்குத் தேவையான அனைத்தையும் நல்லபல திட்டங்கள்வழி நிறைவேற்றி வருகின்றார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்குப் புதியகட்டடம், அங்குப் பழந்தமிழ வாழ்வியல் காட்சிக்கூடம் , திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம், தொல்காப்பிய ஆய்வு இருக்கை, சுவடிப் பாதுகாப்புமையம், மொழியியல்கூடம், உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம் போன்றவற்றையும், சீனம் அரபுமொழிகளில் திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் மொழிபெயர்ப்புப் பல்கலைக்கழகங்கள், தமிழ்அமைப்புகள்,தமிழ்ச் சங்கங்கள் போன்றவற்றுக்கு ஊக்குவிப்புநல்கைகள், அறநெறிக் கருவூலகம், பொன்மொழிக் களஞ்சியம் உலகத் தாய்மொழி நாள் கருத்தரங்கு, தில்லித் தமிழ்ச் சங்கத்திற்குத் தோரணவாயில், தமிழறிஞர் டாக்டர் கால்டுவெல் அவர்களுக்கு நூற்றாண்டு விழா, இளந்தமிழர் இலக்கியப் பட்டறை, தமிழறிஞர் விருது, கணினித் தமிழ்விருது, பிறநாட்டு அறிஞர் பார்வையில் தமிழில் ஆங்கிலத்தில் நூல்கள் போன்றவற்றையும் பன்னோக்குப் பார்வையில் வளர்ச்சி நோக்கில் திறம்படச் செய்து வருகின்றார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் தமிழ்நாடு அரசு ஏற்படுத்திக் கொடுத்த **திருமந்திரமும் வாழ்வியலும்** என்ற பட்டய படிப்பு இத்தகைய பணிகளுள் ஒன்றாக அமைகின்றது. அறிவியலையும் ஆன்மிகத்தையும் வாழ்வியல் நெறிகளையும் சமூகமேம்பாட்டையும் எடுத்துரைப்பதில் தன்னிகரற்று விளங்கும் திருமந்திரத்துக்கான பட்டயச் சான்றிதழ் வழங்கும் விழா உலகப் பல்கலைக்கழகம் என்றும் போற்றப்படும் ஆகஸ்போர்ட் பல்கலைக் கழகத்திலுள்ள ஹார்போர்ட் கல்லூரி மண்டபத்தில் வரும் ஆகஸ்டு மாதம் 8ஆம் தேதி காலை 11 மணிக்கு நிகழ உள்ளது குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நிகழ்வுடன் நடைபெறும் உலகத்தமிழ்த் தத்துவ மாநாடு இப்பட்டைய விழாவிற்குக் கூடுதல் சிறப்பு சேர்ப்பதாக அமைகின்றது. இந்நிகழ்விற்கு அடித்தளம் அமைத்துக்கொடுத்த இலண்டன்வாழ் தமிழர் திருமந்திரப் பொறுப்பாசிரியர் திரு. பற்றிமாகரன் போற்றுதலுக்குரியவர். அனைத்து ஏற்பாடுகளையும் செம்மையாகச் செய்துகொடுத்த நிறுவனப் பேராசிரியர் முனைவர் தி. மகாலட்சுமி அவர்களும் பாராட்டுக்குரியவர்.

தமிழ்மொழியினைப் பக்திமொழியாகவே சான்றோர் கூறுவர். பக்திநூல்கள் தோத்திர நூல்கள் எனப்படுகின்றன. அவற்றுள் திருமந்திரம் ஒன்றே சாத்திர நூலாகும். இந்நூல் இலண்டன்வாழ் தமிழர்களைச் சென்றடைந்ததன்மூலம் உலகத்தின் மையத்தைச் சென்றடைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றி நவில்கின்றோம். இப்பட்டயம் பயின்றோர் திருமந்திரத்திற்கான உயர்பட்டய வகுப்பிலும் தம்மை இணைத்துக்கொண்டு திருமந்திரத்தை உலகஅளவில் கொண்டு செல்ல வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். பயனுறு இந்நிகழ்வு சிறப்புற இறைவனைப் பணிந்து அனைவரையும் மகிழ்வுடன் வாழ்த்துகின்றேன்.


கோ.விசயராகவன்

இயக்குநர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## வாழ்த்துரை



பேரா. முனைவர் தி. மகாலட்சுமி
திருமந்திரப் பட்டயப் பொறுப்பாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600 113.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் **திருமந்திரமும் வாழ்வியலும்** (2014-2015) என்ற பட்டய வகுப்பை நடத்துவதற்கு அனுமதி அளித்த தமிழக அரசிற்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்களுக்கும் என்றென்றும் கடப்பாடுடையேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சார்பாக இலண்டனில் இப்பட்டய வகுப்பினை நடத்திவரும் திருமந்திரம் மற்றும் சைவசித்தாந்த ஆசிரியர் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய திரு.சு.யோ. பற்றிமாகரன் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கப் பாடநூல்களை வழங்கியபோது நான் அடைந்த மகிழ்வினை விட, பட்டயம் வழங்கும் விழா நடப்பது குறித்து ஏற்படும் மகிழ்ச்சி அளப்பரியது.

மனிதர்களின் மனங்களைச் செம்மையாக்கி அவர்கள் ஆன்மாக்களை வழிப்படுத்தும் திருமந்திரம் தன்னைத்தான் உணர வைத்து அன்பு வழிகாட்டும் ஓர் அறிவுப் பெட்டகம் என்றால் அது மிகையல்ல. கற்பித்துக் கொடுத்த ஆசிரியர்களையும், திருமந்திர மாணவர்களையும் இப்பெட்டகத்திலுள்ள தத்துவமுத்துக்களை உலகமக்களிடம் கொண்டு சேர்க்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன். வகுப்பாசிரியர் திரு. பற்றிமாகரன் உள்ளார்ந்த உண்மை ஈடுபாட்டுடன் பட்டய வகுப்பை நடத்தியதோடு மட்டுமல்லாமல் சான்றிதழ் வழங்குதலை சிறப்புறு ஆன்மநேய விழாவாக ஒக்ஸ்வோர்ட்டில் அமைத்துள்ள அவர் தம் முயற்சி போற்றுதலுக்குரியது.

சைவ முன்னேற்றச் சங்கத்தின் திருவாவடுதுறை ஆதின சிந்தாந்த இரத்தினப் பயிற்சி மையத்திற்கும், திருமந்திரப் பயிற்சிக்கு தங்கள் ஆலயத்திலும் இடமளித்த இலண்டன் லூசியன் சிவன்கோவில் அறங்காவலர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து, மேன்மேலும் உங்கள் இறைப்பணியும் தமிழ்ப்பணியும் சிறக்க இறையுருள் கூட்ட வேண்டுகின்றேன்

# ஆசிரியர் ஆசியுரை



சூ.யோ. பற்றிமாகரன்

முனைவர் பட்ட ஆய்வாளர்

திருமந்திரமும் வாழ்வியலும் ஆசிரியர்

ஐக்கிய இராச்சியம்

இலண்டனில் திருமந்திரமும் வாழ்வியலும் பட்டயப் படிப்பினை முன்னெடுக்கும் பொறுப்பை எனக்குத் தந்தமைக்கு முதலில் இறைவனுக்கும் அடுத்து உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்துக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அந்தப் பொறுப்பில் என்னுரையாக அல்லாமல் அவனுரை எனதுரையாக எல்லாம் வல்ல இறைவன் உங்கள் ஒவ்வொருவருக்கும் உங்களுடன் இமைப்பொழுதும் நீங்காதிருக்கும் அவனை உணர்வதற்கான திருவருளைத் தந்திட வேண்டுமென்று அவனருளாலே அவன் தாள் வணங்குகின்றேன்.

திருமந்திரம் தனிமனிதவாழ்விலும் பொதுமனித வாழ்விலும் நாளாந்த வாழ்வில் இறைவன் எம்மை நடாத்துவதற்கு எம்மை இறைவனிடம் கையளிக்க வைக்கும் ஆற்றலை எமக்குத் தருகிறது. "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும் மறைமொழி தானே மந்திரம்" என்ப என்னும் தொல்காப்பிய சூத்திரத்திற்கு அமைய திருமூலரின் மூவாயிரம் பாடல்களும் இறைவனை அடைதல் என்னும் நிறைவு பெற்ற நிறைமொழி மாந்தர்களான நம் முன்னோரின் கட்டளைகளாக எமக்கு விளங்கக் கூடிய அவர்களின் ஆணையிற் கிளந்த கேட்கக் கேட்க அவற்றின் பொருள் மறைவாக இருக்கும் நிலையிலும் எம்மை இயக்கும் மறைமொழியாக உள்ளது. இதனாலேயே இது மந்திரம் என்று அழைக்கப்படுகிறது. திரு என்பதனை த் + இரு = திரு எனப் பிரித்துப் புணர்த்தின் த் என உயிர்களில் எல்லாம் நிறைந்து உள்ளதுடன் சேர்ந்து இரு என்னும் பொருள் படும். அதாவது கடவுளுடன் ஒன்றித்து வாழ்தல் என்னும் பொருளைத் தரும். இதனையே யோகம் என்பர். அந்த வகையில் யோகத்தை இறைவனுடன் ஒன்றித்து வாழ்தலை நடைமுறையாக்கும் மந்திரமாகத் திருமந்திரம் திகழ்கிறது. இதனாலேயே திருமந்திரம் வாழ்வியலாக விரிகிறது.

இந்த திருமந்திரமும் வாழ்வியலும் என்ற உண்மையை உணர்த்தி யோகத்தில் இறைவனுடன் ஒன்றித்து வாழ்தலாம் யோகத்தைப் படிப்பவர் எய்துதலை தலைமை நோக்காகக் கொண்ட அறிவியலாகவும் அதனையும் கடந்து ஞானத்தை நல்கும் திருமுறையாகவும் திருமந்திரம் திகழ்வதினாலேயே அதனை அறிவியல் என்ற வகையில் சாத்திரமாகவும் ஞானவியல் என்ற வகையில் அதனைத் தந்தருள வந்தருளும் தெய்வத்தைப் புகழும் தோத்திரமாகவும் விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் ஒருங்கே வழங்கும் தமிழ்ஞான நூலாகத் திருமந்திரம் தமிழ் இலக்கியத்தில் பரிணமிக்கிறது. இங்கு பரிணமிக்கிறது என்று

சொல்வதற்குக் காரணம் காலத்திற்குக் காலம் திருமந்திரத்திற்கு தரப்படும் விளக்கம் காரணமாக அது காலத்தை வென்று மனிதவாழ்வின் பரிணாமத்துக்கு வழிகாட்டும் வாழ்வியல் நூலாக உள்ளது என்பதை உணர்த்தவேயாகும்.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு ஜெ.ஜெயலலிதா அம்மையார் அவர்கள் திருமந்திரமும் வாழ்வியலும் என்னும் பட்டயப்படிப்பைத் தொடங்கி திருமந்திரத்தைத் தமிழர் தம் வாழ்வியலாகக் கொண்டு வளர்வதற்கான வாய்ப்பினை அளித்த பொழுது, அதற்குப் பொருத்தமானவராகத் திருவருளால் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 23 வருடங்கள் பணியாற்றிய அனுபவமும் சுவடியியல் புலத்தின் பொறுப்பாளராக விளங்கி பழந்தமிழ் நூல்களுடன் நேரடி அனுபவமும் கொண்ட பேராசிரியை முனைவர் தி. மகாலட்சுமி அவர்களை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தைச் சாதாரண பாமரமக்களுக்கும் பயன் தரு நிறுவனமாக மக்கள் மயப்படுத்தி நிற்கும் அதன் இயக்குநர் முனைவர் கே. விஜயராகவன் தேர்ந்து நியமித்தார். பேராசிரியை மகாலட்சுமி சிலப்பதிகாரத்தில் முனைவர் பட்டஆய்வை நடாத்தி முனைவரானது முதல் பல்வேறு தமிழிலக்கிய ஆய்வுகள் சுவடியியல் ஆய்வுகள் இதழியல் ஆய்வுகள் சோதிடவியல் ஆய்வுகள், சித்தமருத்துவ ஆய்வுகள், அகராதியியல் ஆய்வுகள் எனப்பன்முகப்பட்ட ஆய்வாளராக விளங்குபவர். இவரால் திருமந்திரமும் வாழ்வியலும் பட்டயப்படிப்புக்கான பாடத்திட்டம் வகுக்கப்பட்டு திருமந்திரமும் வாழ்வியலும் கற்கைநெறிக்கான நூலும் எழுதப்பட்டுத் திருமந்திரமும் வாழ்வியலும் பட்டயக் கற்கைநெறி, திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 24வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களால் 02.05.2014 இல் தொடக்கி வைக்கப்பட்டது.

திருவாவடுதுறை ஆதீன வரலாற்றிலேயே முதற்தடவையாக கடல்கடந்து ஐரோப்பாக் கண்டத்தின் ஐக்கிய இராச்சியத்து இலண்டன் மாநகர்க்கு ஆதீனம் அவர்கள் 2வது உலகத்திருமுறை மாநாட்டுக்கு எழுந்தருளினார்.

இந்நேரம் இறையருளால் இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் திருவாவடுதுறை ஆதீனத்தின் சைவசித்தாந்த இரத்தினப் பயிற்சி மையத்தின் வழி அங்கும் இலண்டன் சிறி சிவன் கோயில் லூசியத்திலும் இப்பயிற்சியை மேற்கொண்ட 25 பேருக்குச் சைவசித்தாந்த இரத்தினம் பட்டமருளினார்.

இந்த வரலாற்றுப் பெருமை மிகு ஆன்மீக அருள்பொழிவின் தொடர்ச்சியாக அவரால் தொடக்கி வைக்கப்பட்ட உலகத்தமிழராய்ச்சி நிறுவனத்தின் திருமந்திரமும் வாழ்வியலும் அருள்நெறியினை இலண்டனிலும் யேர்மனியிலும் வாழ் 21 பேர் கற்று உணரும் பேருளை இறைவன் எமக்கு அளித்தான். நான் திருமந்திரத்தையோ சைவசித்தாந்தத்தையோ படிப்பிக்கும் அளவுக்கு எனக்கு எந்தத் தகுதியும் இல்லை. ஆனால் ஒவ்வொரு முறையும் இந்தப்பயிற்சிகளைத் தொடங்கும் பொழுது அவனே முன்னால் உள்ளவர்களாக எழுந்தருளி எனக்கு அவர்கள் வழியாகவும் ஞானத்தை அருளுகின்றான் என்பதே என் உள்ள எண்ணம்.

உங்களையும் என்னையும் இறைவன் குறித்துச் சிந்திக்கவும் பேசவும் வைத்த இந்த இறைகருணையைக் கொண்டாடும் முகமாகவே உலகத்தமிழராய்ச்சி நிறுவனத்தின் திருமந்திரமும் வாழ்வியலும் பட்டயமளிப்பை "உலகத் தமிழர் தத்துவ மாநாடு" உடன் பல்கலைக்கழக நகராகிய ஒக்ஸ்வேர்ட்டின், ஒக்ஸ்வேர்ட் பல்கலைகழகத்தின் ஹேர்ட்போர்ட் கல்லூரி மண்டபத்தில், பெருவிழாவாக நிகழ்த்தி புதியதோர் வரலாற்றுக்கான வரலாற்றுப் பதிவை ஏற்படுத்துகின்றோம். இந்த இறைப்பெருங்கருணைக்காக இறைவனுக்கே முதலில் நன்றி கூறுகின்றேன்.

தமிழகத்தில் திருவள்ளுவருக்குப் பல்கலைக்கழகம் அமைத்து திருக்குறளில் பல்கலைகழக நிலை ஆய்வுகள் வளரவழிகாட்டிய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு ஜெ. ஜெயலலிதா

அம்மையார் அவர்கள் திருமந்திரமும் வாழ்வியலும் பட்டப்படிப்பினை, தமிழ்த்துறையில் நீண்டகாலமாக முதுமாணி முனைவர் பட்டங்களைச் சென்னைப் பல்கலைகழகத்தின் கூட்டமைப்புடன் வழங்கிவரும் உலகத்தமிழராய்ச்சி நிறுவனத்தில் தொடங்கியமைக்கு அவர்க்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இதன்வழி திருமந்திரமும் உலகத் தத்துவமாக உலகப் பல்கலைகழக மட்டத்தில் நிலைப்பட இறையருள் பெருகும் என்பது உறுதி. அதனாலேயே கடல்கடந்து திருமந்திரத்திற்குப் பல்கலைகழக நிலையில் வழங்கப்படும் பட்டயமளிப்பு விழாவில் "உலகத் தமிழர் தத்துவ மாநாடு" ஒன்றையும் நடாத்தித் திருமந்திரம் மட்டுமல்ல தமிழர் சமயத் தத்துவங்கள் எல்லாமே உலகத்தத்துவங்களுக்குச் சமானமாகப் பார்க்கப்படும் பெருமை உடைத்து என்பதனை உலகுக்கு அறிவிக்க முயல்கின்றோம்.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் புலம்பெயர் தமிழர்களையும் தம் உடன் பிறப்புக்களாகக் கருதி எத்தனையோ சிக்கல்களுக்கு மத்தியில் தங்களின் திருமந்திரமும் வாழ்வியலும் பயிற்சி நெறியினை புலம்பெயர் தமிழர்களும் பயில்வதற்கு விரிவுபடுத்தினமைக்கு அதன் இயக்குநர் முனைவர் கோ. விஜயராகவன் அவர்களுக்கு எமது இதயநன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். மரபுசார் வழிகள் ஊடாக புலத்துத் தமிழரை இணைப்பதில் உள்ள கஷ்டங்களை எல்லாம் பொருட்படுத்தாது அன்புவழி நின்று தமிழன் என்ற உணர்வுடன் உலகத் தமிழரைத் தானாகவே காணும் அவர் பண்பு கம்பனின் "தாமுளவாக்கல்" என்னும் தத்துவத்தின் நடைமுறை உதாரணமாக எனக்கு அவரைக் காணவைத்தது.

திருமந்திரத்தைப் பரப்புதலைப் புனிதப்பணியாகவே தலைமேற்கொண்டு தன்வாழ்வினை அதற்காகவே அர்ப்பணித்து நிற்கும் பேராசிரியை தி. மகாலட்சுமி அம்மையார் அவர்களுக்கும் எனது இதயநன்றிகள். இவர் தமிழரின் தத்துவங்களில் சோதிடம் உட்பட உள்ள உண்மைகளை உலகறிய வைப்பதற்கான மக்கள் மயப்படுத்தலைச் செய்கின்ற அற்புத சக்தியாக விளங்குகின்றார்.

கூடவே சைவமுன்னேற்றச் சங்கத்தின் நிறுவனர்களில் முக்கியமானவரான திரு.வை. இராமநாதன் அவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தின் சைவசித்தாந்த இரத்தினப் பயிற்சியின் இலண்டன் மையமாகச் சைவமுன்னேற்றிச்சங்கம் (ஐ.இ) அதனைப் பதிவதற்கு எடுத்த முயற்சிகளுக்கும், சைவமுன்னேற்றச்சங்கம் தங்கள் மண்டபத்தை இப்பயிற்சிக்கு இலவசமாகவே கேட்கும் நேரமெல்லாம் தந்து துணைபுரிவதற்கு அதன் தலைவர் அனந்த தியாகர் அவர்களுக்கும், சைவமுன்னேற்றச் சங்க ஆட்சிக் குழுவுக்கும், என் இதயநன்றிகள்.

ஹாசியம் இலண்டன் சிறி சிவன் ஆலயத்தில் சைவசித்தாந்தப் பயிற்சிகளையும் திருமந்திரப் பயிற்சிகளையும் இலவசமாக மண்டபத்தைத் தந்துதவும் அறங்காவல் குழுவினர்க்கும் தலைவர் டாக்டர் து. சிறிஸ்கந்தராசா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இந்நேரத்தில் சைவசித்தாந்தத்தைக் கற்க வேண்டும் என்னும் பேரவாவுடன் சைவசித்தாந்தத்தைப் படிப்பதற்கான குழுவினைத் தொடங்கிய டாக்டர். திருமதி வ. கருணாகரன் அவர்களையும், இம்முயற்சிக்கு ஆதரவு அளித்த அக்கால அறங்காவல் செயலாளர் வி. கணேசமூர்த்தி அவர்களையும், கடந்த ஐந்து ஆண்டுகளாக தமது மருத்துவப் பணிகளுக்கு மத்தியிலும் இப்பயிற்சிகளில் தொடக்கம் முதல் பங்கேற்று வரும் டாக்டர் ச. ஜெயநாதன் தம்பதியினர், டாக்டர் சிவதாசன் டாக்டர் தேவி சிவதாசன் தம்பதியினர் டாக்டர் சி ராஜசுந்தரம், திரு. தில்லையம்பலம் பின்னர் இணைந்து கொண்ட டாக்டர் மா. இரகுபதி, திரு. நகுலேஸ்வரன் ஆகியோரையும் நன்றியுடன் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளேன்.


அவ்வாறே திருமந்திரப் பயிற்சிக்கு சைவமுன்னேற்றச்சங்கத்தின் நிர்வாக ஊழியர் சுப்பிரமணியம் மற்றும் வணக்கத்திற்குரிய சிவராசக் குருக்கள் ஆகியோர் அளித்து வரும் உதவிகளையும், லூசியம் இலண்டன் சிறி சிவன் ஆலய நிர்வாக ஊழியர் நாராயணன் அளிக்கும் உதவிகளுக்கும் இறையாசி உங்களுக்கு நிறைய கிடைக்க வேண்டுமென வேண்டுகின்றேன். மேலும் ஹரோ சைவகலாச்சார அமைப்பின் தலைவர் திரு சத்தியமூர்த்தி அவர்களுக்கும் யேர்மனி டோமார்கன் சைவப்பேரவை சைவப்புலவர்கள் திரு வை. கோகிலன் திருமதி சந்திரா கோகிலன் ஆகியோருக்கும் இதயநன்றிகள்.

கூடவே திருமதி சொ. முருகையன், சைவப்புலவர் க. சிவானந்தன், சட்டத்தரணி செ. திருஞானம், திரு. பெ. சிவஞானம், திருமதி சூ. காந்திமதி, திரு க. நாகேந்திரம், சைவமுன்னேற்றச் சங்கத்தின் செயலாளர் திரு. இந்துசேகரன் ஆகியோர்க்கு நீங்கள் திருமந்திரத்தின் மேல் கொண்டுள்ள பக்திக்கும் அதனை வளர்க்க வேண்டுமென்று கொண்டுள்ள ஆர்வத்துக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

சுருக்கமாகச் சொன்னால் சேர்த்து வைப்பதும் வேறாக்குவதும் இறைவனின் திருச்செயல்கள். எண்ணமே வடிவம் எண்ணுவது நானல்ல என்பதற்கு ஏற்ப உங்களை எல்லாம் என்னோடு இணைத்து என்னையும் உங்களோடு இணைத்து எல்லோரும் திருமூலரின் திருமந்திரத்தை எண்ணவும் கேட்கவும் திருமந்திரத்தில் வளரவும் செய்தான். என்ன இது ஆசியுரை என்றுவிட்டு நன்றியுரை கூறுகிறாரே என நீங்கள் எண்ணலாம். ஆனால் நன்றி நான் கூறுகையில் அது இறைவனுக்கு உங்களது நன்மைத்தனம் குறித்த பிரார்த்தனையாகப் பதிவாகி அவனருள் ஆசி உங்களுக்கு கிட்டும். அவனுக்கே ஆசியளிப்பதற்கான உரிமை என்றுமுள்ளதே தவிர வேறு எந்த உயிர்க்கும் இல்லவேயில்லை.

ஒரு பட்டத்தை உங்களுக்கு இறைவன் அளிக்கையில் அதன்வழி கடமை செய்வதற்கான அழைப்பையும் உங்களுக்கு விடுக்கின்றான். நாவலர் என்னும் பட்டத்தை அளித்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரை ஐந்தாம் குரவர் என்று விதந்துரைக்கப்படும் அளவுக்குச் சைவத் தமிழ்ப் பணி செய்யத் தூண்டிய திருவாவடுதுறை ஆதீனம் உங்கள் ஒவ்வொருவரையும் உலகத் தமிழராராய்ச்சி நிறுவனத்தின் திருமந்திரமும் வாழ்வியலும் பட்டயம் பெறச் செய்து அன்புற்று அமரும் வாழ்வுக்கு அழைத்துள்ளது என்பதே என் எண்ணம். சித்தாந்தரத்தினம் பட்டத்தைப் பெற்றும் திருமந்திரமும் வாழ்வியலும் பட்டயத்தைப் பெற்றும் சிலர் இருநிலைகளில் சைவத்தமிழ்ப்பணிக்கு முத்திரையிடப்பட்டுள்ளீர்கள். எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாத பெருவாழ்வு வாழ்தலே சைவம். இந்நிலையில் தான் சைவம் மதம் என்ற எல்லைக் கோட்டைத் தாண்டிச் சமயம் என்று மனதைப் பக்குவப்படுத்தும் உயர்நிலைக்குச் சென்று, சைவநெறி என்னும் வாழ்வியல் பயிற்சியாகி, சைவநீதி என்னும் நாம் எதனைச் செய்தாலும் அதற்குரிய பயனை அனுபவித்தே ஆவோம் என்கிற பிரகடனமாகிறது. அருளாளர்கள் இந்த அனுபவம் கூட நன்மை தீமை என்னும் பொன் இரும்பு விலங்குகளாகி அவற்றை அனுபவிப்பதற்கான பிறப்புடன் பிணைத்து விடும். எனவே இதுவும் வேண்டா உன்னையே வேண்டும் என்று இறைவனின் திருவடி போற்றும் பெருவாழ்வு வேண்டினர். உலகிலும் உயிர்களிலும் இறைவனைக் கண்டனர். இதனையே திருமூலர் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என முழங்கினார். இந்த முழக்கத்தை மானிடத்தின் அமைதிக்கும் எழுச்சிக்குமான பிரகடனமாகக் கொள்ளுங்கள். அவனே தானாகிய பெருவாழ்வு வாழுங்கள். உயிர்களையும் உலகையும் சிவமாகவே நன்மைத்தனமானவையாகவே காணுங்கள். இச்சிவோகம்பாவ நிலையில் இவ்வுலகிலேயே சிவானந்தப் பேரின்பத்தை உணர்ந்து அதனுடன் உயிர் உடலை உதிர்க்கும் பொழுது தாடலையாக அவனின் திருவடியுடன் பொருந்தி சச்சிதானந்தர் பேரின்பத்தை அனுபவியுங்கள். இதற்கான திறவுகோலாக உங்கள் திருமந்திரமும் வாழ்வியலும் பட்டயம் அமையட்டும். திருச்சிற்றம்பலம்.

சூ.யோ. பற்றிமாகரன் 08.08.2015





# திருநடனத் தத்துவம்



மறவன்புலவு க. சச்சிதானந்தன்

மனத்தை வழிப்படுத்தி ஒடுக்கத்துக்கு அழைத்துச் செல்லுவது தில்லைக் கூத்தனின் திருநடனக் கலை.

பொறி கலங்கி, புலன் ஒடுங்கி, ஆறுபகை நீங்கி, மூன்று குணங்களுள் மென்மையும் தூய்மையும் பெருகி, மனம் ஓய, முனைப்பு அடங்க, தன்னை மறந்து, சிந்தையை எழுப்பித் தலைப்படும் நிலையைத் தருவதே தில்லைக் கூத்தனின் திருநடனக் கலை.

ஐந்து பொறிகள் வழி ஐந்து புலன்களை வழிப்படுத் தந்த திருநடனம். எனவே வழிபாட்டுக்குரிய திருநடனம்.

நவையறு காட்சி:

நகைச்சுவைக் காட்சியைப் பார்க்கிறோம். வயிறு குலுங்கச் சிரிக்கிறோம். சோகக் காட்சிகளைப் பார்க்கிறோம், அழுது கண்ணீர் வடிக்கிறோம்.

கேட்பார் தகைய ஒலி:
பூபாளம் கேட்கிறோம் உற்சாகமாக விழிக்கிறோம். நீலாம்பரி கேட்கிறோம், தூக்கத்தில் அயர்கிறோம்.

முகர்ச்சி:

மல்லிகை மணக்கும் அந்தப் பொழுது, அனைத்தையும் மறந்து மணத்தோடு ஒன்றிய பொழுது.

உண்சுவை:

தேனை நாக்கில் தடவிய அந்த நேரம், அதன் சுவை தவிர வேறெதுவும் தெரிவதில்லை.

தொடுதல்:

மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம். (குறள் 65). கையில் எடுத்து, மடியில் வைத்துத் தோளில் சுமந்து மெய்யின் சுவையை மழலை தரும் பொழுதில் எம்மை மறக்கிறோம்.

காட்சி, கேள்வி, முகர்ச்சி, உண்சுவை, தொடுசுவை என ஐந்து உள்வாங்கல்கள். தனித்தனியாக, கூட்டாக உள்வாங்கி, உணர்ந்து, உட்புகுந்து ஆழ்மனதில் ஒன்றிய ஒடுங்குகையில் பேரின்பப் பெருவெள்ளம்.

காமம் ஓடும், வெறுப்பு ஒதுங்கும், பேராசை புறமாகும். மோகம் மறைந்துவிடும். ஆணவம் அடங்கும் பொறாமை பதுங்கும். மனத்தைத் திசை திருப்பும் இந்த ஆறு குணங்களும் அடங்கி ஒடுங்கிக் கைகட்டி

வாய்பொத்தி, மனத்தின் வழிப்படும். மனம் வழிபடும். பேரின்பம் பெருகும்.

பற்றுக் குறையும். மயக்கமே மயங்கும். தூய்மை ஆட்கொள்ளும். மனத்துக் கண் மாசு இல்லாப் பேரின்பம்.

அடுத்த நிலையில் மனம் ஓயும். முனைப்பு முடங்கும். அறிவு அடங்கும். உணர்வுசார் சிந்தை மேலெழும். சிந்தையில் பேரின்பம் நிறையும்.

மாறிலா மகிழ்ச்சி தரத் தலைப்படும் நிலைக்குச் செல்வதற்காகவே இந்தப் பிறவி. திருநனம் கண்டு இன்ற்றதால் மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம் (திருமுறை 12000253) என்றார்சேக்கிழார்.

ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணம் ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார். (திருமுறை 12000106)

குனித்த புருவத்தால் பொறிகள் கலங்கின.
குமிண் சிரிப்பால் புலன்கள் ஒடுங்கின.
பனித்த சடையால் அறுபகை அகன்றன.
பால் வெண்ணீற்றால் மனம் மென்மையாகியது.
இனித்த பொற்பாதம் மனத்தைத் தூய்மையாக்க மனத்தால் ஒன்றலாம், ஒடுங்கலாம், சிந்தையில் நிறைந்தது, உள்ளத்தில் புகுந்தது, உயிரோடு கலந்தது.
பேரின்பப் பெருவெள்ளமாய் உயிருக்குள் பெருக்கினால் மாறிலா மகிழச்சியில் திளைக்கலாம்.
அதற்காகவே இந்த மனிதப் பிறவி.
உணர்க உய்க.
திருநடனத் தத்துவம் அஃதே.

# இங்கிலாந்தில் தமிழ்மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு தமிழரின் தத்துவங்கள் உணரப்படல் வேண்டும்



றீற்றா பற்றிமாகரன் முனைவர் பட்ட ஆய்வாளர்

இங்கிலாந்து வாழ் தமிழரிடை தமிழ்மொழி வீட்டுமொழியாக உள்ளதே தவிரத் தினம் தினம் சுற்றுச் சூழல்களில் பேசுமொழியாக இல்லை. இந்நிலையில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கான ஆதார பலம் புலத்துத் தமிழர்களுக்கு கற்கைசார் முறையில் வளர்க்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. இதுவே உலகத் தமிழ்த் தத்துவமாநாடு ஒன்றின் அடிப்படைத் தேவையாகிறது என்பது எனது எண்ணம்.

தமிழர் தத்துவம் என்று கூறும் பொழுதே அது வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இன்றுவரை நீண்டு செல்லும் காலப்பரப்பைக் கொண்ட ஒன்று. இதில் எவ்வாறு எதனைத் தமிழரின் குறித்த தத்துவமாக எடுத்துரைக்க முடியும்? என்கிற கேள்விக்கு விடையாகத் திருமூலர் சொன்னதுதான் அன்புற்றமர்தலே சிவம் என்னும் வாழ்வியல் அழைப்பு.

இந்த அழைப்புத் தன்னலம் கொண்ட மனிதனை அதனைத் தாண்டி பொதுநலம் போற்றும் பெருந்தன்மை பெற அழைக்கிறது. இதனையே

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

என்று திருக்குறள் வாழ்வாங்கு வாழும் நெறியாகப் பிரகடனப்படுத்தியது. இந்த வாழ்வாங்கு வாழ்வதற்கான வழியை மாணிக்கவாசகர்

திருவாசகத்தில் "சித்தமலம் அறுவித்து, சிவம் ஆக்கி என்னை ஆண்ட....." என்று அற்புதமாக எடுத்துரைக்கின்றார்.

தன்னலத்தைத் தருகின்ற ஆசை, வெகுளி, காமம் என்னும் மூன்றும் உளம்சார்ந்து நின்று இறைவனை உணராது தடுக்கின்ற சித்தமலங்கள். இதிலிருந்து விடுதலையைத் தரக் கூடியவன் இறைவன் ஒருவனே. அதனால்தான் இறை வழிபாடுகள், இறை போற்றுதல்கள் மனிதவாழ்வின் அடிப்படையாகிறது. இறைவனின் துணைகண்டு அவனருளாலே அவன் தாள் பணிகின்ற பலம் கிட்டும் பொழுதே ஆணவம் ஒடுங்கி தன்னலம் கடந்த மனிதனாக அன்புற்றமர்தல் என்னும் நன்மைத்தனம் செய்தலே வாழ்வின் செல்நெறியாகும். மானிடம் போற்றுதும் மானிடம் போற்றுதும் என இதனையே சங்கத்தமிழ்க் காலம் முதல் சமகாலம் வரை தமிழிலக்கியங்கள் தங்கள் தத்துவமாக உலகிற்கு உரைக்கின்றன.

இந்த உயர்நிலை அழைப்பைத் தமிழ் இலக்கியத்தின் சொத்தாக்கிய தமிழர் தத்துவங்களின் ஆழமும் அகலமும் புலம்பெயர் தமிழர்களில் பலருக்கு அறியப்படாத ஒன்றாக உள்ளதால், வெறுப்பும் விரக்தியும் தனிமையும் பாழ்படுத்தப்படுகிறோம் என்னும் பயமும் வாழ்வின் வெளிப்பாடாக அமையக் கூடிய படைப்புக்களே புலம்பெயர் படைப்புக்களாகப் பரிணமிக்கும் இலக்கியப் போக்கு உணரப்படுகிறது.

இதிலிருந்து விடுபட்டு நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் மானிட சகோதரத்துவமும் மனித விடுதலையும் புலம்பெயர் தமிழ்ப்படைப்புக்களில் பரிணமிப்பதற்குத் தமிழர் தத்துவத் தெளிவு முன்நிபந்தனையாகின்றது. பிறநாட்டு பிறகலாச்சாரத்தன்மைகளின் வழி உருவான தத்துவங்களைத் தமிழன் தனது தத்துவமாகக் கருதி கொண்டதும் இழந்து தவிக்கும் நிலைமாறி உள்ளதை உள்ளபடி எதிர்கொண்டு நல்லதை வல்லதைச் செய்ய என்னால் இயலும் என்ற தன்னம்பிக்கை படைப்புக்களில் வெளியாவதற்கு இத்தகைய தத்துவமாநாடுகள் காலத்தின் தேவையாக உள்ளது. திருக்குறள் திருமந்திரம் திருவாசகம் போன்ற நம் பெருமை மிகு இலக்கியங்களின் ஆழமும் அகலமும் கற்றறிய முடியாத நிலையிலும் கேட்டு உணரும் வழியிலாவது நம்மை வந்தடைய இத்தகைய தத்துவமாநாடுகளை வளர்த்திடல் நம்மினக்கடமையாக உள்ளது.

# TIRUKKURAL : ETHICS OF ALTRUISTIC LOVE



**Professor P Maruthanayagam**

In his Indian Thought and its Devlopment, Albert Schweitzer who has made a thorough study of Indian, Chinese and Western ethical writings states,

With sure strokes, the Kural draws the ideal of simple ethical humanity. On the most varied questions concerning the conduct of man to himself and to the world its utterances are chacterized by nobility and good sense. There hardly exists in the literature of the world a collection of maxims in which we find so much lofty wisdom.

Drawing our attention to the social weltanschauung of Tirukkural, Thani Nayaga Atikal echoes this view:

> The chapters on love, culture, wisdom, honour, friendship are impregnated with exhortations and reflections regarding a purposive altruism as the basis of the ideal personality. There are few ancient world classics in which the ethics of altruistic love are so elaborately outlines as in the Tirukkural and a person's entire life and personality are said to be perfect only when dedicated to a life of complete self-giving. (PP. 38-39)

Of the ancient cultures, Egypt is given the credit of having produced the first ethical writings which are dated back to 3000BC. Though some of these writings as well as the Egyptian proverbs are indicative of the importance given to ethical conduct by that society, as Thani Nayaga Atikal observes, their ethics was not as advanced and refined as the path shown by Tirukkural. The Egyptians would have been hard pressed to speak of virtues like i:kai, oppuravu and canranmai. Their language did not have adequate terms for some of the sophisticated aspects of righteousness which Valluvar could easily express in Tamil. In this context, it is extremely illuminating to learn that some of the ancient classical languages lacked words that would connote the nuances of some virtues themselves. F.W Ellis mentions how Aristotle struggles hard to describe in Greek with Valluvar could eloquently put forth in Tamil.

Even 'such an opulent language like Greek' has no term for ',dpait $wy;' forcing Aristotle to define the nameless virtue as the intermediate habit between flattery and moroseness between that disposition which inclines the feeble-minded in all cases to sacrifice their own opinionsin

deference to others, and that by which men are excited to content for the mere sake of contention' (Ellis:335)

Ellis chides some European writers, who because of their ignorance of Indian languages, have stated that these have no world corresponding to 'gratitude' thereby implying that the very virtue called gratitude is unknown to the Indian:

To this calumny let this chapter of Tiruvalluvar (the one on Ceynnanriyarital) and the accompaniments to it be the answer, as in it the idea will be found to be expressed in many varying modes. (Ellis: 353-4)

Translating 'Natuvu Nilaimai' as 'equity' and 'distributive justice' he observes that 'the Tamil compound intimately corresponds to the Greek term for justice for 'natuvu' means primarily the middle and justice by a metaphor only and 'natuvunilaimai' consequently, maintenance of a middle station or state of equality with regard to all others, not moving to either side or being biased by any consideration of fear, anger or affection'. (Ellis: 367)

Translating the Kural: "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" into English, Ellis openly concedes that 'both the translation and explanation very inadequately convey the strength and vivid expression of the original' (Ellis: 356)

Aram is rendered virtue by Ellis, who brings out its full significance in a detailed note:

It signifies virtue generally, moral right as opposed to wrong, religious righteousness and the merit resulting from religious acts, the positive rights of things and persons, as ordained by law or established by custom and the maintenance of such rights, or justice, and lastly charity in the abstract and charitable acts of every description (Ellis: 97)

According to Sundarraj, the author of Rig Vedic Studies, the Sanskrit word 'dharma' itself was derived from the Tamil 'aram'. We would do well to remember that the supreme virtue connoted by the unique Tamil word 'oppuravu' is celebrated by Valluvar in a full-length chapter. It is learnt that this term meaning 'social obligation', 'doing public good', 'service-oriented living' entered Sanskrit long ago and is to be found in the Rig Veda itself.

It is rewarding to examine how these virtues were viewed by the great thinkers of the world. In Plato's ideal republic, there is no scope for the bliss of family life to individual citizens who have to sacrifice it at the altar of the state. What is more atrocious is that Plato believes in class distinctions and denies even the right to education to the labour class which is found unfit for a virtuous life. Men are not born equal and are not to be treated as equals.

You are brothers. Yet God has framed you differently. Some of you have the power of command, and in the composition of these he has mingled gold, wherefore also they have the greatest honour; others he has made of silver, to be auxiliaries; others again who are to be husbandmen and craftsmen he has composed of brass and iron. For an oracle says that when a man of brass or iron guards the state, it will be destroyed (p.19)

We would be surprised to note that Socrates and Plato, hailed as great rationalists are not free from superstitions. It is also equally surprising to note that Plato and Aristotle have nothing to say against the system of slavery widely practised during their days. In the city of Athens, a group of ten thousand citizens were served by two lakh slaves. Valluvar's 'Pirappokkum Ella Uyirkkum' (By birth all beings are equal) is a far cry from Plato's irrational belief in class hierarchy.

Where internationalism is concerned, Plato and Aristotle are found terribly wanting; they cannot hold a candle to Valluvar. To them, the Greeks alone are a cultured race while the rest of the world are barbarians. The Greek city-states are the ultimate models. Aristotle stipulated that the foreigner should be kept at a distance of five miles away from the capital city because, otherwise, they will corrupt the Athenian citizens by their contact. It is well-known that in his work Valluvar does not mention even the name of his language, his nation or his race anywhere in his work.

According to Plato himself, the state that he envisions is only an imitation, a pale reflection of the idea of the state to be found in heaven alone. He stresses his strange belief that everything we find on Earth is a defective approximation of the flawless celestial ideal. The ideal state that Valluvar conceives of can be and has to be established here. There is nothing mythical or illusory about it. The Greek philosopher's state is a static one that doesn't have to progress further. Valluvar's is a dynamic one that has to keep improving.

Finally, it is clear that Plato treating 'knowledge' and 'virtue' as synonyms believes that if a man has the knowledge or a virtue, he will uphold it automatically. But to Valluvar, knowledge and virtue are two different things and that one does not necessarily follow the other.

According to Aristotle, virtue is what lies between two extremes. It is the golden mean between vices of excess action and vices of deficiency of action. Courage represents the middle path between foolhardiness and cowardice; temperature between licentiousness and insensibility; liberality between prodigality and illiberality; magnificence between vulgarity and meanness; high-minded ness between vanity and little-minded ness; truthfulness between boastfulness and self-depreciation; wittiness between buffoonery and boorishness; friendliness between obsequiousness and quarrelsomeness; modesty between bashfulness and shamelessness; righteousness between envy and malice. There is a subtle difference between the Aristotelian concept of ethical values as via media and Valluvar's delineation of virtue. Valluvar while lauding every virtue condemns the corresponding or related vice. If there is a chapter on education, there is another on lack of education. If there is a chapter on 'Friendship' there are four chapters called 'Choosing Friends', 'Friendship to be cherished', 'Friendship to be shunned' and 'Harmful Friendship'. A chapter on 'righteous reign' is followed by one on 'Villainous reign'. But he sets no limit on any virtue. There is no question of compromising with any virtue, no question of providing for an escape route, no question of what is called 'apaddharma'. The superiority of Valluvar's outlook will be evident if one realises that Aristotle has belittled virtue itself by quantifying it. In fact, the great German

philosopher Kant condemned Aristotle for making only a quantitative difference between Virtue and Vice. Valluvar cannot be accused of undervaluing righteousness.

The Roman philosopher Lucretius in his De Rerum Natura gives an imaginative account of the growth of living forms from the Earth and the progress of human life from primitive men who lived in the woods and caves to civilized beings. He is extremely cold and heartless when he advocates that the prudent should refrain from direct or indirect association with the common people. Three poetic images are used by him to describe the bliss experienced by the wise who distance themselves from the grief-stricken mob: a man on a firm cliff watching the seaman toil below, a man at a safe distance watching two armies fighting against each other, and a man perched at the top of a hill viewing the giddy crowd deep below:

> How sweet to stand, when tempests tear the main
> On the firm cliff, and mark the seaman's toil!
> Not that another's danger soothes the soul,
> But from such toil how sweet to feel secure!
> How sweet, at a distance from the strife, to view
> Contending hosts, and hear the clash of war!
> But sweeter far on wisdom's height serene,
> Upheld by truth, to fix our firm abode;
> To watch the giddy crowd that, deep below;
> Forever wander in pursuit of bliss;
> To mark the strife of honours and renown
> For wit and wealth, insatiate, ceaseless urged
> Day after day, with labour unrestrained.

How different from Valluvar's advice to the wise!

> If doing public good brings disaster one should court it
> By selling one's self (st. 220)

Of all Greco-Roman philosophies, stoicism is closest to what may be called Valluvam. The cardinal principles of this philosophy promulgated in Athen around 300BC may be summarized as follows: Life should be consistent with nature and reason and living consistently with reason. All living beings are born with an instinct for personal affections which enables them to preserve themselves. As man is endowed with the power of reason, he should evince a ken interest in personal health and public good. Virtue by itself is enough for blessedness. Passion, which is but a wrong judgement of good and evil is to be condemned. Repression of emotion and indifference to pleasure and pain are the fundamental tenets of this philosophy.

Of all the Greco-Roman philosophers, it is Seneca who is closest to Valluvar. He has also insisted on many of the virtues which Valluvar advocates such as generosity, social obligation, and justice. Some of his moral sayings are very similar to Valluvar's:

> There is no enmity or force which cannot be
> Conquered by love.

> No man is nobler than his fellow even if it
> Happens that his spiritual nature is better

Constituted and he is more capable of
Higher learning.

The world is the one mother of us all and
The ultimate origin of each one of us can be
Traced back to her whether the steps in the ladder of
Descent be noble or humble.

To no one is virtue forbidden; she is accessible to all; she admits
Everyone, she invites everyone in: free men and
Freed men, slaves, kings and exiles. She regards
Neither birth nor fortune; the man alone is all
She wants.

It is a mistake to think that the status of
A slave affects the whole of a person's nature';
The nobler part of it is not touched thereby.

Every single person, even if there is nothing
Else to recommend him. I must hold in
Regard, because he bears the name of man.

Every single person, even if there is nothing
Else to recommend him. I must hold in
Regard, because he bears the name of man.

In the treatment of a slave we have to
Consider not how much we can do to him
Without being liable to punishment,
But how much the nature of right and of
Justice allows us to do, seeing that these
Bid us treat gently even prisoners and
Purchased slaves. Although in the treatment
Of a slave everything is allowed, there is
Nevertheless something which through
The common right of every living being is
Stigmatized as not permissible in
The treatment of a man, because he is of
The same nature as thyself. (pp 39-40)

Though what the stoic philosophers have said on friendship, love and other virtues remind us of Valluvar's world view. There is a vital difference which may strike those that undertake a deep study. Valluvar's ultimate emphasis is that one should lead one's life selflessly and for the benefit of others. But even while stressing love and friendship, the Roman stoics take into consideration one's own interest, prosperity and progress. In their view, friendship is good because it helps one refine one's personality and serves as a source of one's pleasure. What Valluvar says on what he calls 'Palaimai' (Intimacy, old friendship, deep rooted friendship) has not occurred to any of them and what is more significant would not have been acceptable to any of them.

If friends do any harm, realize that it is due to ignorance
Or excessive affection. (Kural 805)

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோக்க நட்டார் செயின்

Those whole love is deep - rooted will not cease to love
Even when their friends cause destruction.

அழிவந்த செய்யினும் அன்பு அறார் அன்பன்
வழிவந்த கேண்மையவர்.

Again the roman philosophers without a single exception are proud of their race, their countrymen, their achievement and of their great men who are all the time presented as models. Valluvar doesn't betray his racial, religious, national or linguistic identity anywhere. They all the time speak of 'nos' (we) and nostri (ours) and keep in mind the Roman readers' advantage while recommending anything.

It is true that the Buddha is reported to have praised active benevolence and love. The Sutta-Nipata expects a man to love not only his neighbour but all the world.

As a mother at the risk of her life watches
Over her own child, so let everyone cultivate
A boundless love towards all beings.

But Buddhism considered this earthly life a disease caused by desire and the Buddhist ethics is fundamentally pessimistic. The ideal man, according to Buddhist ideology, is the rishi or scholar who runs away from social life just as the swan flies away from lakes and enjoys his lonely life in the forests like peacocks.

Dhammapada extols the men who not only flee from the common crowd but treat it with utter contempt. The forests where the rishis live in order to be away from the ordinary beings are praised as delightful places.

When the learned man drives away vanity by
Earnestness, he, the wise, climbing the terraced
Heights of wisdom, looks down upon the fools;
Free from sorrow he looks upon the sorrowing
Crowd, as one that stands on a mountain looks
Down upon them that stand upon the plain.

Such an assumption of airs would be anathema to Valluvar.

As early as 1950, Pitrim A. Sorokin contended in his Altruistic Love that altruistic persons enjoy remarkable vitality and a long duration of life and that the bane of contemporary Western culture, literature and social science is their complete indifference to altruistic love.

In its declining sensate phase Western culture has become increasingly negativistic. In papers and magazines it devotes the front page to hair-raising murder stories, to sex scandals,

perversions, to hypocrisy or insanity hardly every mentioning any good deed or anything truly positive. It does the same in fiction, in cinemas and plays, in operas and songs, in painting and sculpture, in radio and television. Sex, insanity and crime constitute roughly from 80 to 90 per cent of the topics in these fields of contemporary Western culture. The situation is no different in other fields. Our sensate culture there also dwells mainly in the region of sub social sewers, breathes mainly their foul air, and drags down into their turbid muck everything heroic, positive, true, good and beautiful. In accordance with the total nature of our negativistic culture, our social science has been semi-blind about all negative types and relationships. It seems to have enjoyed moving in the muck of social sewers; it has been reluctant to move in the fresh air of high social peaks. It has stressed the pathological and neglected the sound and heroic (p. 48)

Inspired by Sorokin's profound remarks, Thani Nayaga Atikal delivered a series of three lectures on aspects of Tamil humanism drawing the attention of Western scholars to the surprisingly early discovery of the ethic of altruistic love and service by Tamil society. In his talk entitled 'The Ideal of the Expanding Self', he convincingly demonstrated how the Tamil bards and poets of the distant past were responsible for the development of the expanding self in the Tamil country and how the Akam and Puram poems of the Cankam Age and especially Tirukkural taught the ancient society that altruistic love is the ideal which will confer on any society the strength and creativity which it needs so that its members may find both happiness and freedom.

Now as recently as the first decade of the 21st century, there has been a vindication of Valluvar's observations on the idea of altruism in an article publishes in Reader's Digest, January 2009. In 'Why Kindness is Good for You' Claire Buckis has gathered together the findings of some leading Western sociologists based on empirical evidence.

It is heartening to learn that a new theory called 'survival of the nicest' has been proposed in the place of Charles Darwin's 'survival of the fittest' which, to the terrible shame of mankimd, equated it with animals. Analyzing ancient societies Professor Sam Bowles from the Santa Fe Institute in the US has found that kindness is a key component of the survival of communities. According to him, groups with many altruists tend to survive and it is altruists who cooperate and contribute to the well-being of fellow-group members. He adds that most of what makes like worth living depends on at least some of us being altruistic some of the time and that we cannot address problems like global climate change, the spread of disease and political violence by appealing only to selfish motives

The world's indebtedness to altruists is stressed by Tiruvalluvar as well as by Cankam poets.

> The water from Pannam's garden,
> If drunk after eating the nelli fruit,
> Will be exceedingly sweet,
> Because Pannan doesn't live for
> Himself but for others. (Akam 54, 13-16)

This would exists because there are in it people who would not consume even divine nectar selfishly alone if they happen to get it, who are entirely without malice and fear, who don't waver, who are prepared to sacrifice their lives for the sake of fame, who wouldn't accept the whole world if it will bring blame and who untiringly work not for their own good bur for the good of others. (Puram 182)

The world survives because it is
Sustained by men of culture;
Otherwise it would have gone down
And perished under the Earth. (Kural 996)

To men that are incapable of a cordial smile, the vast world
Looks engulfed in darkness even in daylight. (Kural 999)

This wide world wouldn't be able to bear
The burden of its weight if the virtue of
Sublime men declines. (Kural 990)

Recent research has shown that kindness also makes human beings happier. Professor Sonja Lyubornirsky of the University of California asked a team of men and women to perform random acts of kindness over ten weeks. Their happiness increased considerable over the period. Those that performed a vast variety of kind acts reported higher levels of happiness than those that performed a single act of kindness repeatedly.

In at least four chapters of ten couplets each, 'Aran Valiyuruttal' (Stressing the value of righteous conduct), Kannottam (Benignity), 'Canranmai' (Perfectness), and 'Anputaimai' (Loving Kindness), Tiruvalluvar repeatedly contends that by being kind to others one gains much more than what one gives. One Kural categorically states,

True joy is what comes out of acts of kindness; all else
Is outside its domain and devoid of glory as well. (Kural 990)

Professor Lyubornirsky's fidning reveals that through it makes no difference to a person's happiness if he or she helps a loved one or a stranger, it may have different consequences.

A small, anonymouse act night
Make you fee like a good person,
But a big kind act to an acquaintance
May have social consequences;
You might make a new friend or be
Generously thanked.

Though helping all fellow-human beings is advocated in ancient Tamil writings, a distinction is made between helping relatives and helping strangers.

To those that love you, to those that you love,
To the virtuous, chaste, elderly female
Relatives of yours, to those that lent us
Much, removing the terrible hunger of
Our clan, to everyone without discrimination,
You also give, my dear wife, without
Consulting even me, without saving for
A bright future, the wealth given by
Kumanan, who wields a well-shaped
Spear and owns the fruit-filled Mutiram (Puram 163)

Tirukkural has a separate chapter entitled 'Curramtalal' (Cherishing One's Kindred) which particularly underscores the value of doing good to one's kith and kin.

If one has relatives that shower unfailing
Love, one may ceaselessly reap benefits. (Kural 522)

The life of one that is bereft of kinsmen
Is like a lake whose expanse fills up
Without banks. (Kural 523)

The end of one's possession of wealth is to
Live happily surrounded by relations. (Kural 524)

If one gives and talks pleasantly,
One will be surrounded by a crowd of kith and kin. (Kural 525)

The crow, not concealing, calls other crows to partake in the feeding;
Wealth is meant for men of such disposition. (Kural 527)

In his 'Why Good Things Happen to Good People' Professor Stephen Post observes that being kind is good for one's health. From a study of 2016 church members he has come to the conclusion that those who regularly help others have better mental health and lower rates of depression. Other studies confirm that helpful people are less likely to fall ill from chronic diseases and tend to have better immune systems. There is a strong correlation between the happiness and health of people that are kind at heart. This means that kindess regulats emotions producing a positive impact on our health. On the other hand, if our response becomes overactive, our cardio-vascular system is affected and the body's immunity weakened. Post's final finding is that 'it is difficult to be angry, resentful, or fearful when one is showing unselfish love towards another person' (p. 124)

Again one would recall the astounding statement made by Sorkin in 1950:

Other conditions being equal, altruistic
Persons live longer than egoistic individuals.
The combination of a person of too little love
With too much hate, is largely responsible
For many cardiovascular, respiratory,
Gastro-intestinal, endocrinological,
Geneto-urinary and skin diseases plus
Some forms of epilepsy and headache (p. 62)

Valluvar repeatedly warns that ill-tempered people cause greater harm to themselves than to others.

Is there a worse foe to man
Than anger that kills both smile and joy? (Kural 304)

If you want to save yourself, save
Yourself from anger; if you do not guard

Yourself against wrath, it will kill you. (Kural 305)

The fire of anger will slay those
That draw near and burn the protective raft of kinsmen. (Kural 306)

The ruin of the one that holds anger in high esteem
Is as inescapable as the pain of the hand that smites the Earth (Kural 307)

Be under the sway of compassion choosing it
By righteous means; though you may explore many things,
You will find it to be the only support. (Kural 242)

The prosperity of those that are free from
Vanity, anger and meanness will be a
Dignified one. (Kural 431)

A study conducted by Hebrew University in 2005 finds 'a close link between kindness and a gene that releases dopamine, a feel-good neurotransmitter in the brain' (p. 126). Alan Luks, in his 'The Healing Power of Doing Good' reports that helpers experience a distinct physical sensation when being good and even feel more energetic warm, calmer and greater self-worth. This phenomenon is called by him the 'helper's high' (p. 126)

In a report published in Science, Sam Bowles exploded the myth that people are inherently selfish and that we will do something good only for a financial reward or to avoid a fine. His research reveals that we resent the idea that our principles can be bought. We prefer to do good deeds for their own sake. 'People enjoy being kind to others, much as they enjoy eating ice-cream. It gives us pleasure' (p. 128)

Another equally illuminating finding is that children show a tendency to be kind even before they are able to speak. 'Children as young as two will pick up an item dropped on the floor by an adult and give it back to them, but only if the toddler believes the item wasn't dropped deliberately' (p. 127)

The belief that man is essentially selfish was widely prevalent in the past also. Aristotle firmly believed that self-love is the real basis of every friendship. Brihadaranyaka Upanishad states that our love for the self is at the bottom of our love of all other objects. Maitrayi tells Yajnavalkya,

Verily, not for the love of the husband, my dear, is the husband dear (to his wife), but for the love of the self, the husband is dear (to his wife). Verily, not for the love of the wife, my dear, is the wife dear (to her husband), but for the love of the self is the wife dear (to her husband). Verily, not for the love of the sons, my dear, are sons dear (to their parents), but for the love of the self are the sons dear (to their parents). Verily not for the love of all, my dear, is all dear, but for the love of the self is all dear. (p. 198)

Valluvar rejects this notion about love and posits the view that the innate feeling of love is the hallmark of every human being.

They say that it is to taste the life of love
That the soul has been united with the body (Kural 71)

The very bliss on Earth is the result of
A life of love (Kural 75)

Just as the boneless worm is burnt up
By the Sun, the loveless being will be
Destroyed by Aram (Kural 77)

Loveless beings live in vain. Their life is
Like the flourishing of a withered tree
Upon a parched desert. (Kural 78)

Of what avail is a lovely outside, when
The soul within is devoid of love? (Kural 79)

Love is natural for every being; bodies
Of loveless beings are only bones
Wrapped in skin. (Kural 8)

It may be noted here that ancient Greek poets like Pindar didn't evince any interest in public good and that philosophers like Aristotle nowhere advocated altruism to the Greek society. But Tiruvalluvar, besides praising altruistic culture wherever possible has a full chapter devoted to what is called 'oppuravarital' (becoming aware of social responsibility)

Public duty expects no recompense. What gift
Can the world offer to the rain clouds? (Kural 211)

All the wealth that one's toil earns
Is meant for use is helping the deserving. (Kural 212)

He alone lives who is aware of public good;
The rest are deemed to be among the dead. (Kural 214)

The wealth of the one ripe in mind and desirous of
Public good is like a town's tank frilled with water. (Kural 215)

The wealth that falls to the kind-hearted is like a tree
Ripe with fruits inside a town (Kural 216)

The wealth that comes to the generous-hearted
Is like a medicinal tree that doesn't fail to heal. (Kural 211)

Even when resources fail, men with the vision of
Public good will not weary of their duty. (Kural 218)


For it's cherishing of altruistic ideals, the Tamil society id glorified by Rev. G. U. Pope

Yet pervading these verses there seems to me to be a strong sense of moral obligation, an earnest aspiration after righteousness, a fervent and unselfish charity, and generally a loftiness of aim that are very impressive. I have felt sometimes as if there must be a blessing in store for a people that delight so utterly in compositions thus remarkably expressive of a hunger and thirst after righteousness. They are the foremost among the peoples of India and the Kural and Nalati have helped to make them so.

It should be said to the credit of Tiruvalluvar that several centuries ago he gave the best expression to the vital need of altruism for the survival of a cultured society or even of the whole of humanity.

**References**


1. Claive Buckis. 'Why Kindness is Good for You' in Reader's Digest, January 2009
2. Nalatiyar, tr. Rev. G. U. Pope 1984, New Delhi: Asian Educational Services
3. Pitrim A. Sorokin 1950, Altruistic Love, Beacon Press, Boston
4. The Brihadaranyaka Upanishad, tr. Swami Sivananda 1985, U.P : The Divien Life Society
5. Tirukkural: Mulamum Parimelalakar Uraiyum 1989, Chennai: Caiva Cittanta Nurpatippukkalakam. Translation of all the Tamil poems cited in the article is the author's .
6. Xavier S. Thani Nayagam 1967, 'The Ideal of the Expanding Self', Aspects of Tamil Humanism, Madras: Madras University

## அனுபவ உரை

### சிந்திப்பாரவர் சிந்தையுள்ளானை ........................

வைத்தியக் கலாநிதி சி ராஜசுந்தரம்

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழைலை முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே.

தாய்ப்பால் உடலுக்குச் சத்தியளிப்பது போல் உயிர்க்கு சத்தி தருவது திருவருள். தாய் புகட்டினும் தாய்ப்பாலை குழந்தை தன் முயற்சியால் தான் அருந்த முடிகிறது. ஆனால் நினைப்பாற்றலாம் சிவத்தின் செயலாற்றலாம் சத்தியோ தானாகவே வலிய வந்து வினைப்பயன் நீக்கத் தன் திருவருள் பொழிகின்றதால் அவள் அருள்முலை உண்ணாமுலை. தந்தருள வந்தருளும் தெய்வம் நின்று அருளும் நிலை. இவ்வாறு திகழ் உமையாளுடன் ஒருமையில் இருமையாகிய அர்த்தநாரீஸ்வர கோலம் காட்டி நின்று இருமையில் ஒருமையாக நாம் அவனில் இன்புறச் செய்யும் கருணைப்பேருவம் சிவன். அவன் திருவருளைப் பொழிவதால் பெண்ணாகவே சத்தியின் வடிவாகவே உயிர் பெற்றுத் திகழும் இறைவனின் வடிவான திருவண்ணாமலை, இயற்கையிலும் எல்லாவகையான மணிகளும் விளை வளமண்ணாகவும் அருவிகள் அருள்பெருக்காய்ப் பாயும் ஓசைகள் முழவு ஒலிப்பது போல் பேரோசை செய்யும் தன்மை கொண்டதாகவும் திகழ்கிறது. இங்கு அருண் அசலம் உற்ற அதாவது நீள்ஒளியாய் நின்ற இறைவடிவு அசையாத வடிவு கொண்ட மலையாக நிலைபெற்றதால் அருணாசலேசுரரான அண்ணாமலையார் திருவடி தொழுவார் வினைகள் எல்லாம் அற்று வீழும். இந்த உண்மையை உள்ளத்து இருத்தி எம் பழவினைகள் பாறும் வண்ணம் அவன் மலரடியினை முதலில் தொழுகின்றேன்.

அடுத்து நான் சிறிதளவு படித்தம சைவசித்தாந்தம் என்னும் அருள் குவிப்பை நினைக்கையில் "இருள்" எனும் ஆணவ மலத்தில் முற்றும் அழுந்தி மயக்கமுற்று இருக்கின்ற ஆன்மாவை ஈடேற்றுவதற்கு, நாம் எவ்வாறு முயற்சி செய்ய வேண்டுமெனத் தெளிவான அறிவை அது எமக்குச் சுட்டுகின்றது என்பதை என் எண்ணடாக உங்களுடன் பகிர வைக்கின்றது. எனினும் இந்நெறியைக் கற்பதற்கு உள்ளத் தூய்மை அவசியம். இதனை மணிவாசகப் பெருமானின் வாழ்வு எமக்கு எடுத்துக்காட்டும் சிலஉதாரணங் கொண்டு எம் உள்ளத்திருத்தலே இச்சிறு கட்டுரையின் நோக்கு.

தனது இளமைப்பிராயத்திலேயே சிறந்த கல்வியறிவும், அறிவுத் திறனும், ஒருங்கே கைவரப்பெற்று, அதன் காரணமாக அரிமர்த்தன பாண்டியனால் முதலமைச்சராக நியமிக்கப்பெற்று, கல்விக்கான சிறந்த விருதாகிய தென்னவன் பிரம்மராயன் பட்டத்தையும் பெற்றவர் திருவாதவூரார். ஆயினும் திருவாதவூரார் உடைய ஆன்மா சிவம் என்றால் என்ன ஞானம் என்றால் என்ன போதம் என்றால் எனத் தேடியலைந்தது. இதற்கு

விடை அவர் குதிரை வேண்டவென மதுரையின் செல்வக்களஞ்சியத்தின் திறப்பினை இடுப்பினில் கொண்டு சென்ற வேளை திருப்பெருந்துறையில் கிடைத்தது. குருந்து மரநிழலில் இளவயது குரு ஒருவர் கையில் சிவஞானபோதம் என்னும் நூலுடன் வயது முதிர்ந்தோர்க்குப் போதிப்பது கண்டு தன் கேள்வியாக உள்ளது அவர் கைநூலின் தலைப்பாக இருத்தல் கண்டு அந்த இளவயதுக் குருவுக்கு அருகே அது குறித்து வினாவச் சென்றார் திருவாதவூரார். அந்த இளங்குருவோ தன் திருவடியினை இவர் சென்னியில் பதிக்க அத்திருவடித் தீட்சை பெற்ற உணர்வை,

"கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியில் சேவடி தீண்டினன் காண்க
சிவன் என யானும் தேறினன் காண்க
அவன் எனை ஆட்கொண்டு அருளினன் காண்க"

எனத் திருவண்டப்பகுதியில் அவரே பின்னர் எடுத்துரைப்பதைக் காண்கின்றோம். அன்று முதல் இந்த உணர்விலேயே சித்தம் நிலைத்திட வாழ்ந்த திருவாதவூரார்.

"சிந்தனை நின்தனைக்கு ஆக்கி நாயினேன் தன்
கண் இணைநின் திருப்பாதம் போதுக்கு ஆக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்கு உன்
**மணிவார்த்தைக்கு** ஆக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தனை ஆட்கொண்டு உள்ளே புகுந்த விச்சை
மால் அமுதம் பெரும் கடலே மலையே உன்னைத்
தந்தனை செம்தாமரைக்காடு அனைய மேனித்
தனிச்சுடரே இரண்டும் இல் இத்தனிய னேற்கே."

எனப்பாடியமையே அவர்க்கு மாணிக்கவாசகர் என்ற வழக்குப் பெயர் தோன்ற வைத்தது. பண்டாய நான்மறையிலும் மாணிக்கவாசகப் பெருமான்

பேசும் பொருளுக்கு இலக்கு இதம் ஆம் பேச்சு இறந்த
மாசில் மணியின் **மணிவார்த்தை** பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பு அறுத்தேன் நல்ல
மருந்தின் அடி என் மனத்தே வைத்து

என்று பாடி இறைவனை அடிமனத்து எந்நேரமும் வைத்து எண்ணிப் போற்றி மனமாசு அறுத்தாலே பிறப்பு அறுக்க முடியும் என்று தெளிவாக எடுத்து விளக்குகின்றார்.

இந்த மனமாசு அகற்றல் தன்னில் திருவடித் தீட்சையால் நிகழ்ந்த பின்னரும் தன்னை மண்ணில் விட்டு இறைவன் மறைந்த வேதனையால் உருகிய உள்ளத்துப் பாடல்களே திருவாசகமாக நாம் ஓதும் திருமுறை.

இதனையே குழைத்த பத்தில்

அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை
ஆட்கொண்ட போதே கொண்டிலையோ

என்னும் மாணிக்கவாசகரின் உள்ள அரற்றல் மொழியில் காண்கின்றோம். ஆயினும் இறைவன் எதனையும் நன்மைக்கே செய்வான் என்னும் உறுதி மொழியாக

இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ
எண்தோள்முக்கண் எம்மானே

என்னும் நம்பிக்கை மொழி அடுத்த வரியாகப் பாடலில் இணைகிறது. கூடவே வினைப்பயனை அனுபவிக்க வைப்பதற்குத் தான் இறைவன் உயிர் மேல் காட்டும் பாசம் என்னும் பெருங்கருணையினால் உயிர் இன்பதுன்ப நுகர்வுகளுக்குள் செல்லுதல் தெய்வநீதியாக இருந்தாலும், இப்பொழுது நான் உன்னால் ஆட்கொள்ளப்பட்டு விட்டதை உணர்ந்த நிலையில் இப்பொழுது நான் செய்யும் வினைகளுக்கு நான் தலைவன் அல்ல. என்று உரிமையுடன் வாதாடுகின்றார் மாணிக்கவாசகர். இதுவே

நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே

என்று தன் மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தகரணங்கள் நான்கையும் இறைவனுக்கு முற்றாகவே அர்ப்பணித்துத் தன்வினைக்குத் தான் பொறுப்பல்ல என்று இறைவனில் பூரணமாகச் சரணடைந்து வினைசெய்யா நிலைக்கு தன்னை உள்ளாக்கி சித்தமலம் என அவர் சொன்ன ஆசை வெகுளி காமம் மூன்றையும் அறுப்பதற்கான வல்லமையையும் பெற்றுவிடுகின்றார். சிந்திப்பார் அவர் சிந்தை உள்ளானை என நாம் இறைவனை நினைந்தாலே தாயாக அவன் சிந்தையுள் நின்று சித்தமலம் அறுவிப்பான் என்பது மாணிக்கவாசகரின் வாய்மொழி.

இவ்வாறு இறைசித்தத்திற்கு உயிரையும் உடலையும் முற்றுமுழுதாக அர்ப்பணித்து வாழும் நிலைதான் மனப்பக்குவம். இந்த மனப்பக்குவத்திற்கு வழிகாட்டு நெறிதான் சைவசித்தாந்தம். எமது உள்ளம் தூய்மை பெற்று அறவாழ்க்கையைக் கடைப்பிடிக்காவிட்டால், சைவசித்தாந்தக் கல்வி வெறும் கல்வி அறிவாகவே எமக்குப் பயனளிக்கும். எனவே அறவாழ்வுக்கான கல்வியே கல்வி என்பதனை நம் மனசிருத்தவே வள்ளுவர்

அழுக்காறு அவா வெகுளி இன்னா சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்
என்று அழகான குறள் தந்தார். மேலும்

மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

என்று ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றார்.

மாணிக்கவாசகர் ஆன்மாவின் முயற்சி எவ்வாறு அமைய வேண்டும் என்பதனையும் திருச்சதகத்தில் எடுத்துரைக்க மறக்கவில்லை.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன் விரை அர் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி **உள்ளம்**
**பொய்தான் தவிர்ந்து** உன்னைப் போற்றி
சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன். உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே

என்று மெய்யுணர்த்தி பொய்யகற்றும் இத்திருச்சதகம் உள்ளம் மாசற்றதாதல் இறையருளைப் பெறுதலுக்கான முன்நிபந்தனை என்பதனை மனதிருத்தும் மாணிக்கவாசகரின் அனுபவ வெளிப்பாடாகிறது.

இவ்வாறு அறவாழ்க்கையைப் பின்பற்றி எமது உள்ளங்களைப் பக்குவப்படுத்துவதன் மூலம் ஆணவமலத்தை ஒடுக்க ஒடுக்க உள்ளத்தின் உள்ளே இதுவரை எமது சிற்றறிவிற்குப் புலப்படாதிருந்த ஞானச்சுடராம் இறைசத்தி சிறிது சிறிதாக ஒளிரத் தொடங்கும்.

திருமூலர் திருமந்திரம் ஆணவத்தின் தன்மை எவ்வாறு எமது உள்ளத்தின் உள்ளே மறைந்திருக்கின்ற இறைஉணர்வை மூடி மறைக்கின்ற தன்மையை விளக்குகின்றது.

உள்ளத்து ஒருவனை உள்ளுறு சோதியை
உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறியாதே

என்பது ஆணவத்தால் ஆண்டவனை அறியா ஆன்மாவின் இயல்பு நிலையை உணர்த்தும் திருமந்திர இரண்டாம் தந்திர இன்தமிழ் மந்திரம். .

ஆணவ இருளின் தன்மையை மேலும் தெளிவாகப் புரிந்து கொண்ட சந்தானக் குரவர்களால் அதனை நமக்கு விளக்கு அருளப்பட்ட உலகின் அதிஉன்னத ஆன்மீக நூல்களாகிய மெய்கண்ட சாத்திரங்கள் 14 இல் 8 நூல்களுக்கு ஆசிரியராக இருந்தவர் உமாபதி சிவாச்சாரியார். அதிவணக்கத்துக்குரிய ஜி. யூ. போப் அவர்களின் கண்ணுக்கு திராவிட சந்ததிக்கே அணிகலனாக உமாபதி சிவாச்சாரியார் தெரிந்தார். 'G. U. Pope referred to Umapathy Sivachariyar as the 'choicest product of Dravidian Intellect' என்பது ஜி யூ போப் அவர்களின் போற்றுதல் குறித்த ஆங்கில விபரிப்பு. இவ்வாறு ஒக்ஸ்வேர்ட் பல்கலைகழகத்தில் கீழைத்தேய மொழித்துறைக்கே தலைமைப் பேராசிரியராக விளங்கிய ஜி யூ.போப் அவர்களின் போற்றுதலுக்குரியவரான உமாபதி சிவாச்சாரியாரின் திருவருட்பயன் குறள்வெண்பாக்கள், உவமைகளின் சிறப்பால் பயில்வோரின் மனதை ஈர்ப்பது. இறைவனின் அருட்தன்மையையும், ஆன்மா கடைப்பிடிக்க வேண்டிய அன்புறு நிலையையும், ஐந்தெழுத்தின் பெருமையையும், அணைந்தோர் தன்மையையும் எடுத்துக்காட்டும் திருவருள் பொழிவு. இத்தகைய சிறப்புடை திருவருட்பயனில் அவர் கூறும்

ஒரு பொருளும் காட்டா திருளுருவங் காட்டும்
இரு பொருளுங் காட்டா திது

என்னும் திருவருட்பயன் இருட்டானது மற்றைய பொருள்களைக் காட்டாது. ஆயினும் இது இருள் எனத் தன் உருவத்தைக் காட்டும். ஆனால் ஆணவ மலமானது பிற பொருளையும் காட்டாது, தன்னையும் மறைத்துக் கொண்டு நிற்கும் என ஆணவத்தின் தன்மை உணர்த்துகிறது.

இவ்வாறு தனக்கு ஆதாரமாக உள்ள இறைவன் என்னும் பதியையும், அவனது பெருங்கருணையாம் உயிர் மேல் கொண்ட பாசத்தையும், மலங்களால் கட்டுண்டு பசுவாக உள்ள உயிரின் தன்மையையும், உயிர் தளையறுத்து விடுதலை பெற்று இறைவனைச் சாரவென உயிர் வாழ்தல் என்னும் பெருங்கொடை பெறுகிற பெருமையையும் எடுத்து விளக்கும் பேரறிவுப் பெட்டகமான சைவசித்தாந்தத்தின் வழி ஒரு சிறிதளவேனும் பயன்பெற வேண்டின் மாணிக்கவாசகப் பெருமானின் வாழ்வுதாரணத்தை நாம் தினம் தினம் மனதிருத்தல் வேண்டும்.

மாணிக்கவாசகப் பெருமானின் சிவபுராணத்து மணிவார்த்தைகளில் கூறுவதானால், விலங்கு மனத்தால் (என்றும் அநாதியாக ஆன்மாவோடு இணைந்திருக்கும் ஆணவமலத்தால் விலங்குத் தன்மையைக் கொண்ட மனித மனம் எம் மனம், குற்றமுள்ள மனம்), விமலா (நீயோ குற்றங்கள் என்பதே மலம் என்பதே இல்லா மாசில்லாப்பொருள்), உனக்குக் கலந்த அன்பாகி கசிந்து உள் உருகும் (உன்னுடன் ஒன்றித்து அன்புசெய்கையில் உன்னருளால் உள்ளத்தின் கடினத்தன்மை நெகிழ்ந்து உள்ளம் உருககின்ற) நலன்தான் இலாத சிறியேற்கு நல்கி ( சிறிதளவு என்கிலும் சிறப்பு எதுவுமில்லாத சிறியேனுக்கு உன்திருவருளால் அருள்பாலித்து) நிலந்தன் மேல் வந்தருளி (புவனியில் எழுந்தருளி) நீள்கழல்கள் காஅட்டி (நீள் ஒளியாக நின்ற குளிர்மை தரு திருவடிகளைக் காட்டி), நாயின் கடையாய்க் கிடந்த) (நாயிலும் கீழாக நன்றி என்னும் பண்பினைக் கூட மறந்து – என்னை உன் கருணையினால் மனிதனெனும் ஒருருவாக்கினாய் என்பதனைக் கூட மறந்து – இருந்த எனக்குத்) தாயிற் சிறந்த தயாவான தத்துவனே (தாயிலும் சிறந்த அன்புடன்) தயாவான ( இருமையில் ஒருமையாக என்னைவிட்டு இமைப்பொழுதும் பிரியாது நீயே நானாகிய) தத்துவனே ( நான் அதுவாக இருக்கிறேன் என உணர்த்தியவனே) மாசற்ற சோதி (குற்றமில்லா சோதிவடிவாக) மலர்ந்த மலர்ச்சுடரே ( என் உள்ளத்தில் நிலைபெற்ற என் குற்றங்களுக்காக என்னைச் சுட்டெரியாது மலர் போன்ற மென்மையையும் இனிமையையும் தந்து என்னுள் .இதயத்தில் சுடர் ஒளியாக ஒளிர்பவனே) தேசனே ( ஒளிவடிவாய் அறியாமை வறுமை அகற்றுபவனே) தேனார் அமுதே ( தேனாக நினைத்ததுமே இனிப்பவனே அமுதாக மரணத்தை வெல்லவைப்பவனே) சிவபுரனே ( நன்மைத்தனத்தையே வெளிப்பாடகக் கொண்டவனே) பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே ( பாசத்தையும் அதனால் விளையும் பற்றுக்களையும் அறுத்து வாழவைக்கும் ஞானகுருவே) நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப் போராது நின்ற பெருங்கருணைப் பேராறே! ( விட்டு நீங்கா அன்பான நேசத்தால் அருள் புரிந்து நெஞ்சில் உள்ள வஞ்சம் என்னும் கடந்ததை நடந்ததைக் காவிச் செயற்படும் தன்மை கெடவைத்து மாசில்லா மனதுடன் நிலைத்து வாழவைக்கும் கருணைப் பேராறே) நமது உள்ளத்தைப் பண்படுத்தும் சிறந்த நெறியை நாளும் கடைப்பிடித்து நாமொழுக நல்லருள் செய்தே நற்கதி தருவாய் நீயே!



# சிற்றிலக்கியங்களில் மறமும் பக்தியும்

முனைவர் பட்டவாய்வாளர் சித்தாந்தரத்தினம் ஜெ. சசிதா பாலமுருகா BA, M.A.M.Phil

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழி போலே
இனிதாவது எங்கும் காணோம்"

என்றார் மகாகவி பாரதியார். அப்படிப்பட்ட இனிய தமிழ் மொழியின் அணிகளாக அறம், மறம், பக்தி விளங்குகின்றது என்றால் அது தமிழ் மொழிக்கே உரிய சிறப்பாகும். அமுத சுரபி போல் அள்ள அள்ளக் குறையாத வகையில் தமிழ் மொழிக்குள் அடங்கி கிடக்கும் இலக்கண இலக்கியங்களை விரிந்துரைக்கின் ஒரு மானுட ஆயுட்காலம் போதாது.

எனினும் ஒரு அணுத்துளிபோல் இவ்விழா மலரில் என் குருவின் ஆசியுடன் "மறமும் பக்தியும்" என்ற தலைப்பின் கீழ் சில கருத்துக்களை பகிர்ந்து கொள்கின்றேன்.

**பக்தி:-**

பக்தி என்று சொல்லப்படும் போது கடவுள், குரு முதலியோர் இடத்தில் வைக்கும் அல்லது போற்றும் "அன்பு" என்று பொருள்படும். இது வழிபாடு என்ற முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. "பக்தி இலக்கிய காலம்" என்று சிறப்பிக்கப்படுகின்ற ஒரு கால மாற்றமே இருந்த நிலை தமிழ் மொழிக்கே உரிய சிறப்பாகும். பக்தி ஒரு உயிரை மேம்படுத்துகின்றது. பண்படுத்துகின்றது.

**மறம்:-**

மறம் என்ற சொல்லுக்கு "வீரம்" என்பது பொருள். தறுகண் மறவரது வீரச்செயலை விளக்கும் புறத்துறைகளுள் மறம் என்பதும் ஒன்று. உயர்ந்த புகழை பெற விரும்பிப் பலவகை இன்னல்களுக்கிடையே பகைவர் சேனையைத் தடுத்து நிறுத்தும் போர்ச்செயலில் ஈடுபட்ட வீரன் ஒருவன் பகைவருடைய மாறுபாட்டிற்குப் பொறாதவனாகிப் பகைவரது வேல் பாய்ந்தமையால் தன்மார்பில் கண் உண்டாகிய புண்ணைக் கிழித்து இறக்கும் நிலை மறக்காஞ்சியென்னும் புறக்குறையாகும்.

**திரு கண்ணப்ப தேவர் திருமறம்:-**

பொத்தப்பி நாட்டிலுள்ள உடுப்பூர் என்ற ஊரின் வேடுவர் குடியிலே நாகன் என்ற தந்தைக்கும் தத்தை என்ற அன்னைக்கும் திண்ணப்பன் என்ற மகன் பிறந்து வளர்ந்து வந்தார். வேடுவ குலத்தை சேர்ந்தவராகையால் விலங்குகளை வேட்டையாடச் செல்லுதல் குலத் தொழிலாகையால் ஒருமுறை இவ்வாறு சென்ற பொழுது, முன்பு செய்த நல்வினையின் பயனாக திருக்காளத்தி மலைமீது எழுந்தருளி இருந்த சிவலிங்கத் திருமேனியை காணும் தவத்தினைப் பெற்றார். கண்டதும் அளவிலா அன்பு கொண்டார். இறை திருமேனியை விட்டுப் பிரியாத நிலை கொண்டார். இறைத் திருமேனியை காப்பதும். இறைச் சேவை செய்வதுமே தனது திண்ணமாக கொண்டார் தின்னப்பர். ஆனால் வேடுவ குலத்தவராதலால் ஆகம முறை ஏதும் அறியார். வில்லோடு கணைகளை எடுத்து தீக்கண்களையும் கடுங்குரலையும் கொண்ட நாய் பின் தொடர அஞ்சி ஒடுங்கும் அந்த வெம்மையான பகலிலே இறை திருமேனிக்கு தனக்கு தெரிந்த முறைப்படி சேவை செய்தார் திண்ணப்பர்.

*"தண்ணறுஞ் சுவைநீர் தன்வாய்க் குடத்தால்*
*மஞ்சனமான முகந்து மலரெனக்*
*குஞ்சியில் துவர்க்குதலை செருகி குனிசிலை"*

அதாவது சுனை நீரினைத் தன் வாயால் மொண்டு, மலரை தன் குடுமியில் செருகி பின் வாய்நீரை மஞ்சன நீராக இறை திருமேனியில் பொழிந்து தன்முடியில் சூடிய மலரை இறைவனுக்கு சூட்டி தான் கடித்து சுவை பார்த்த இறைச்சியை இறைவனுக்கு படைத்து அன்பினால் இறைத் திருமேனியைக் கட்டித் தழுவி, கூத்தாடி, வணங்கி விடைபெற்று கானகம் சென்றார் திண்ணப்பர்.

காலை மலர்ந்ததும் வழக்கமாக காளத்தியப்பருக்கு பூசை செய்யும் அந்தணரான சிவ கோசரியார் பூசை செய்ய சென்ற போது திண்ணப்பன் செய்து வைத்திருந்த பூசைமுறைகளைக் கண்டு அதிர்ச்சியுற்று கலங்கி தவித்தார். பின் அதனையெல்லாம் சுத்தம் செய்து ஆகம முறைப்படி இறைவனுக்கு பூசை செய்துவிட்டு தன் இல்லம் சென்றார். ஆனால் தொடர்ந்தும் இது போலவே நடப்பதை கண்டு கலங்கினார் அந்தணர். மறைந்த நின்று வேடனின் செயலை கண்ணுற்ற சிவ கோசரியார் மேலும் கலக்கமுற்றார். செய்வதறியாது திகைத்தார். அவ் வேடனிடம் சென்று கேட்கின் அவன் தன்னைக் கொன்று விடுவான் என்று அஞ்சி இறைவனிடமே முறையிட்டார். இறைவனும் சிவகோசரியார் கனவில் தோன்றி திண்ணப்பர் அன்பை மறு நாள் புரிய வைப்பதாக கூறினார். அதுபோலவே திண்ணப்பர் இறைச்சி, நீர், மலர் ஆகியவற்றை இறைவனுக்கு அர்பணிக்க வரும் வேளையில் முக்கண்ணனாகிய இறைவன் தன் ஒரு கண்ணில் இருந்து குருதி பெருக செய்தார். அதைக்கண்டு தன் கண்ணில் அடிபட்டது போல் துடித்தான் வேடனான திண்ணப்பன்.

மூலிகைகளாலும் இலைதளைகளாலும் தனக்கு தெரிந்த மருத்துவமுறைகளை எல்லாம் செய்து பார்த்தும் குருதியை நிறுத்த முடியாததால் கண்ணுக்கு கண்ணே முறை என்று அம்பினால் தன் கண்ணை பெயர்த்து காளத்தியப்பர் கண்ணில் அப்பினார். உடனே குருதிவடிதல் நின்றது. அது கண்டு பெருமகிழ்ச்சி கொண்ட போது காளத்தியப்பரின் இன்னொரு கண்ணில் இருந்து குருதி பெருக கண்டார்.

ஆனால் திண்ணப்பன் கலங்காது என்னிடம் தான் மருந்துள்ளதே என்று அடையாளத்திற்காக தன் செருப்புக் காலை இறைவனின் குருதி பெருகும் கண்அருகில் அழுத்திக் கொண்டு தன் இன்னொரு கண்ணையும் அம்பால் பெயர்க்க துணிந்தார். அப்போது இறைவன் எழுந்தருளி திண்ணப்பரை கையால் தடுத்து ஆட் கொண்டார். "கண்ணப்பா நிற்க" என்று தன் மலர்க் கரங்களால் தடுத்து ஆட்கொண்டார் தாயினும் இனிய இறைவன். கண்ணப்ப நாயனார் என்னும் பெரும் புகழ் கொண்டார் திண்ணப்பர். கண்ணப்ப திருமனம் என்னும் பனுவலை நக்கீர பெருமானே முதன்முதலில் இயற்றியருளினார். இது பெரிய புராணத்தில் கண்ணப்ப நாயனார் புராணத்தை சேக்கிழார் கூறுவதற்கு ஆதாரமாய் அமைந்தது என்பர்.

"அறத்திற்கே யன்புசார் பென்ப அறியலார்
மறத்திற்கும் அ∴தே துணை"

என்றார் திருவள்ளுவர்.

"ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ"

என்கிறார் சேக்கிழார். தன்னால் வழிபடப்படும் காளத்தியப்பரின் கண்ணில் குருதியை கண்டு பொறுக்காமல் தன் கண்ணை இழத்தலே மேல் என்று எண்ணிய செயல் பகைவரது சேனையை தடுத்து போர் புரியும் வீரன் பகைவரை நிறுத்த இயலாத

நிலையில் தன் மார்பின் புண்ணைக் கிழித்து உயிர் துறக்கும் வீரச் செயலை ஒத்ததாயின் இதனை மறம் என்றார் நக்கீரர்.

நல்லறங்களைச் செய்வதற்கு மட்டு மன்றி மறமாகிய வீரச் செயலை மேற் கொள்வதற்கும் அன்பாகிய பண்பே துணை நிற்கும். உலகியல் இன்பத்து புகழைபெறு தல்கான வீரத்தை மட்டுமல்லாது பெறுதற் கரிய அரும் பெரும் செல்வமான இறை இன்பத்தை பெறுதல் பொருட்டு செய்தல என்பதால் இது "திருமறம்" எனப் போற்றப்பட்டது.

இங்கு கண்ணப்பரின் மனத் திண்மையே பெரும் பக்தியாகவும் அப்பக்தியின் அடிப்படையில் பெரும் வீரமாகவும், அவற்றை பிணைத்து நிற்கும் நிலை அன்பாகவும் உள்ளது. தன் வலிகளை உணராது தன்னையே அர்பணித்து நிற்கும் மறம் நிறைந்த பக்தியாக விளங்குவது கண்ணப்ப நாயனாரின் மற அன்பே ஆகும்.

கண்ணப்பரின் பக்தி ஈடு இணையில்லா நிலையில் உள்ள அன்பாகும். இறைவனின் மலர்க் கரத்தால் தடுத்தாட் கொள்ளப்பட்ட பெருமையும் சிறப்பும் இவருக்கே உரியது.

அவ் இறை அன்பினை பின்பற்றிடில் வேறு துணை வேண்டுமோ உலகில்? இறைவன் எல்லா உயிர்களுக்கும் எளியனாய் இருத்தலை நாம் இதன் மூலம் கண்கூடாக உணர முடிகின்றது.

"வான் முகில் வழாது பெய்க
மதிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்"

தாயினும் இனியன் சேயினும் நல்லோன் அந்த இறையைப் போற்றுவோம் அன்பால்.



# வாழ்வுக்கு இறைநம்பிக்கையுடன் கூடிய தத்துவங்கள் வழிகாட்டுகின்றன

சைவப்புலவர் திருமதி சந்திரா கோகிலன் - யேர்மனி

வாழ்வின் சிறப்புக்கு இறைநம்பிக்கையுடன் கூடிய தத்துவங்கள் வழிகாட்டுகின்றன என்றால் மிகையாகாது. உண்மைப்பொருளான இறைவனுடன் சார்ந்தும் கலந்தும் நின்ற நிலையில் தங்கள் அனுபவமாக இந்த இறை அனுபவ உணர்வைத் தந்தவர்கள் நமது முன்னோர்கள் தூய அன்பினாலும் தளராத உறுதியினாலுமே இதனைப் பெற்றுக்கொண்ட வரலாறு தான் தெரிகின்றது.

அப்பர் பெருமான் வரலாற்றிலே அவருக்கு வந்த துன்பத்தினை இறைத் துணையுடனேயே கடந்தார் என்பது வரலாறு. தாய் தந்தையர் இறந்த துன்பம் வாட்டியபோதும், தனக்கு வரனாக பெற்றோர் பார்த்த கணவர் இறந்து போன சோகத்திலும் கூட தம்பிக்காக வாழ்ந்தவர் அப்பர் பெருமானின் தமக்கையாரான திலகவதியார். இந்நிலையில் தன் தம்பி சமண சமயத்தில் சேர்ந்து தன்னை விட்டுப்பிரிந்து பல வருடங்களாகியும் உறுதிமாறாமல் தன்தம்பியை மீட்டுத்தருமாறு இறைவனிடம் வேண்டியவரலாறும் எம்கண் முன்னே அகச்சான்றாக இருக்கின்றது .

திருஞானசம்பந்தப்பெருமானோ ***"ஈனர்கட்கு எளியேன் அலேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே"*** என்று பாடியது ஏன்? உடலுக்கு தீங்கு வந்த போது அதனைப்போக்காமல் விதி என்று கூறிச்செல்லும் வீணர்களைப்பார்த்து .நீங்கள் இவ்வாறு கூறிக்கொண்டிருந்தால் இறைவன் ஏன் இருக்கின்றான். அவன் அருள் நாடி நம் குறையை முடித்துக்கொள்வதே நாம் செய்யும் கடமை என்பதைக்கருத்தில் கொண்டு ***அவ்வினைக்கு இவ்வினை*** என்று பாடி அருளினார். இவ்வாறு இறை அன்பை அறிவிப்பதன் மூலம் அன்பு வழியை அறிவித்தவர்கள் இவர்கள்.

இவ்வாறு அன்பை பெருக்கியவர்களால் கடைப்பிடிக்கப்பட்ட சைவசமயமானது சடங்குகளுக்குள் அகப்பட்டு, உண்மை நிலையறியாது இருப்பது வேதனைக்குரியது.

எந்த தனி மனிதராலும் தோற்றுவிக்கப்படாத சைவமானது தனக்கென்று எந்த எல்லையும் வகுத்தது கிடையாது . தேவையான காலகட்டங்களில் உண்மையை அறிவித்த சமயமாக விளங்கியதொன்றாகவே காணக்கூடிய ஒன்றாக விளங்குகின்றது . சைவசமயமானது நாயன்மார் தோன்றிய காலத்திற்கு முற்பட்டது. நாயன்மார்கள் கூட இறை அன்பை எமக்கு தெரிவித்தார்களே தவிர, யாரையும் சைவராக மாற்றமுயலவில்லை. ஏனெனில் பிறசமயங்கள் போன்று சமய மாற்றத்தை விரும்பாத ஒன்று சைவசமயம் .ஏனெனில் சைவமானது அவரவர் சமூக சூழல் மனநிலைக்கு ஏற்ப இறைவனைக் கண்டு வாழ வழிவகுத்தது.

சமயகுரவர்களாகிய நாயன்மார்களையோ அல்லது பரம்பொருளான சிவபெருமானையோ வணங்காத சாக்கியநாயனார் பெரியபுராணத்தில் இடம் பிடித்தது எவ்வாறு?. ஒரு பரம் பொருளிடம் நம்பிக்கை கொண்டு வாழ்ந்தே ஒருவன் சைவனாக வாழமுடியும்.என்பதை உணர்த்தியது சாக்கியநாயனார் வரலாறு.

அதே பரம் பொருளை நம்பி வேதத்தை முழுமையாகக் கற்ற முனிவர்கள் தம் தவத்தின் வலிமையால்தான் தமது மனைவியரெல்லாம் கற்புடையவர்வளாக இருக்கின்றனர் என்ற இறுமாப்பில்இருந்த போது அவர்களின் ஆணவத்தை அகற்றிய வரலாறுதான் இறைவனின் பிச்சாடனமூர்த்தி கோலம்.

வேதங்கள் யாவற்றையும் கற்றும் இறைவனை அடையத்தடையாக இருந்த ஆணவத்தை அறியாமல் இருந்த முனிவர்களுக்கு வேதத்தின் பொருளை உணர்த்தினான் இறைவன்.

மனத்தூய்மையோடு திருக்கோயில் கட்ட முயன்று அது இயலாமற் போகவே மனதில் தோன்றும் நினைவு ஒன்றையே துணையாகக்கொண்டு இறைவனுக்கு கோயில் கட்டிய பெருமை உடைய பூசலாரைப் பெற்றுக்கொண்டது சைவம். இதன் எதிராக இமயத்தில் கையாலயத்தில் உறைபவனான இறைவன் வந்து விரும்பி உறையத்தகுந்த கோயிலை கட்டிவிட்டதாக நினைத்து இறுமாந்திருந்த பல்லவ மன்னனின் கைலாய நாதர் கோயிலில் அதன் திருமுழுக்குக்குக் குறிப்பிட்ட நாளன்று அங்கு எழுந்தருள முடியாது என்று அவனுக்குக் கனவில் உரைத்தான் இறைவன். இறைவன் உறையத்தகுந்த இடத்தை தான் கட்டிவிட்டதாக நினைத்த காரணத்திற்காக இறைவன் அக்கோயிலில் எழுந்தருளாத வரலாறு நம்மையும் பொருளால் அல்ல அருளால் இறைவனை அடைய அழைக்கிறது.

இவ்வாறாக அன்பின் வலையில் அகப்படுவன் ,இறைவன் .அவன் இயல்பினை அறிந்து அவனே புகலிடம் என்று எண்ணி அவனை அடையும் வழிவகைகள் அறிபவனே சைவனாகின்றான். பிற சமயங்களும் அன்பின் சிறப்பைக் கூறியதுண்டு அன்பு செய்தால் ,கடவுளை அடையலாம் என்று கூறும் சமயங்களும் உண்டு.

***“அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்.”***, என்று கூறி அன்பே சவனை அடைதலுக்கான வழி என்கிறது திருமந்திரம். சமயங்கள் மக்களுக்குத்தொண்டு செய்தால் அது இறைவனுக்கு உகந்ததாகும் என உரைக்கின்றன. இதனை மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனவும் கூறகின்றது. இதனையே திருமந்திரம் ***“ படமாடக்கோயில் பரமற்கொன்று ஈயின்”*** என்பதினுடாக விளக்குகின்றது .மக்களுக்கு நேரிடையாகச்செய்யப்படும் தொண்டு இறைவனுக்கு செய்யப்பட்டதாகும் என்று கூறக்கூடிய உறுதி தந்தது திருமந்திரம். பெரிய புராணத்தில் வரும் அடியார்கள் பலரும் மக்கள் தொண்டு செய்தே மகேசன் பாதம் அடைந்தனர். யாரோ .ஒரு பெண் கணவனைப்பறிகொடுத்து வருந்தி அழுதாள் என்றால் அது அவளின் விதி என்று கூறிவிட்டுக்செல்லாமல் அவர் துயர் துடைத்த ஞானசம்பந்தப்பெருமானின் கருணையைக்காட்டியது பெரியபுராணம். திருவீழிமிழலையில் ,மக்கள் பசியால் வாடியபோது அதனைச்சகிக்கமுடியாமல் மடம் அமைத்து பஞ்சம் தீர்க்கும் வரையில் உணவு இட்டதும் அவர் வரலாறாகும். கல்லோடு அப்பர் பெருமானைக் கட்டி கடலில் எறிந்த போதும் .மத யானையை ஏவித் தன்னைக்கொல்லவிட்ட சமணர்களிடம் சிறிதளவும் காழ்புணர்வுகொள்ளாத கருணை யுள்ளத்தைக் கண்டதும் திருமுறைகள் அன்புக்குத் தரும் முக்கியத்துவமாக உள்ளன.

எத்துணை சிறந்த செயல்களைச்செய்தாலும் அச்செயலின் பின்னேயுள்ள மனம் தூய்மையாக இல்லையெனின் நேர்மாறான பயனையே தரும் என்ற உலகம் கண்டு வியக்கும் கொள்கையைக்கொண்டது சைவம் .


இவ்வாறான தன்மையைக்கொண்ட சைவமானது மக்களுக்குள்ளே பல ஒருமைப்பாடுகளைக்கொண்டே வளர்ந்த அற்புதத்தினைக்கொண்டது. ***“ஒன்றே குலம் ஒருவனே தேவன்”*** என பறைசாற்றினார் திருமூலர்

கண்ணப்பர் வரலாற்றிலே வாணாள் முழுவதும் விதிமுறை பிறழாமல் காளத்தி நாதனைப் பூசித்தும் அவனைக் கனவிலன்றி நனவிற் காணமுடியாத சிவகோசரியரையும் அவர் எதிரே வாழ்ந்தும்,***“தன் பரிசும் வினை இரண்டும் சாரும் மலம் மூன்றும் அற ,அன்பு பிழம்பாய்த் திரிவார்”*** இந்நிலையில் ஆறுநாட்களில் இறைவனே வெளிப்பட்டு தம் கையைப்பற்றிக்கொள்ளும் அளவில் வளர்ந்து கண்ணப்பரை பற்றிக்கொண்டது இறைவனின் திருவருள்.

மெய்கண்டதேவரின் தந்தையின் குலகுருவாக இருந்த, சகலாகம பண்டிதரான அருணந்திசிவாச்சாரியார் ஒரு சமயம் மெய்கண்டதேவரிடம் வந்து, "ஆணவத்தின் இலக்கணம் என்ன? என்று கேட்டார். அவரைத் தம் ஆட்காட்டி விரலால் சுட்டி ,அவர் எண்ணிய இந்த எண்ணமேதான் ஆணவம் என்ற உண்மையை விளக்கிய பெருந்தகை மெய்கண்டரை நமக்கு அளித்தது சைவம். இவ்வாறு காட்டியவர் ஐந்து வயது நிரம்பாத பாலகர் எனத்தெரிந்தும், அவரது ஆட்காட்டி விரல் அஞ்ஞானத்தை சுட்டெரித்தது எனஉணர்ந்து கொண்டு உடனே இளைய பெருந்தகையின் திருவடியில் வீழ்ந்து சீடனாகும் மனப்பக்குவத்தை எய்திய அருணந்தி சிவத்தைப் பெற்றிருப்பது சைவம் .

இன்று உலகம் முழுவதும் தேடினாலும் இத்தகைய பரந்து பட்ட கொள்கையையும், சகிப்புத்தன்மையையும் கொண்ட சமயத்தை காண்பது அரிது. இத்தகைய சைவசமயத்தின் உரிமையாளர்கள் நாங்கள். எமது பரம்பரைச்சொத்து எத்தகையது என்பதை அறிந்து கொள்ளாமலும் அறிய முடியலாமலும் குறிப்பிட்ட வட்டத்திற்குள் ஓடிக்கொண்டிருக்கின்றோம். சமயம் ஒன்று தேவையா என்று கேட்கும் இன்றைய காலத்தில் சைவசமயத்தின் தத்துவங்களை அறிந்து கொண்டு போலி வேடங்களை ஒதுக்கி முன்னிறுத்தலே இச்சமய வழி நிற்க உதவும். சைவமானது உயிருடன் ஊட்டம் பெற்று வளருகின்ற ஒன்றாகும் . காலம் காலமாக ஏற்பட்ட முற்போக்கான கருத்துக்களைக்கொண்ட இச்சமயத்தின் தேவையானது உயிர்களின் பரிமாணத்துடன் வளர்ந்து கொண்டே இருக்கும் அதற்கேற்ப அவனருளால் சைவமும் தழைத்துக்கொண்டே இருக்கும்.


**(உதவி நூல்கள் :- 1. சமகாலம் - 2. தத்துவமும் பக்தியும்- )**



**034 எம்பிரான் சாக்கிய நாயனார்**
**மார்கழி - பூராடம் (400 - 600)**

# *கி.பி 8 முதல் 10 வரையான காலத் தமிழர் தத்துவங்கள்.*

(மாணிக்கவாசகர் சுவாமிகள் நூலுக்கு முதன்மை)



இந்துசேகரன் *B.Eng (Hons)*

தமிழர்கள் நீண்ட நெடிய சமூக, சமய. அரசியல் பண்பாட்டு மரபில் தத்துவ சிந்தனை சார்ந்த கருத்துக்கள் முதன்மையானவை.

தத்துவம் என்பது வாழ்வின் பொருள் குறித்து வழங்கும் கருத்துக்களையும் கோட்பாடுகளையும் ஆராய்ச்சிக்குட்படுத்தும் ஓர் அலகாகும்.

உலகில் உள்ள ஒவ்வொரு பண்பாட்டு மரபுகளும் தமக்கே உரிய தனித்துவமான தத்துவ மரபுகளைக் கொண்டுள்ளன. அவை அவர்களுடைய நாளாந்த வாழ்வு தொடக்கம் வாழ்வின் அனைத்து இயங்கியல் கூறுகள் பற்றிய தெளிவான சிந்தனை மரபுகளை காலந்தோறும் சமூக பண்பாட்டு வயமாக்கச் செயன்முறையின் வழியே பாதுகாத்து வருகின்றன.

மனித வாழ்வுடன் தொடர்புடைய பொருளாதார, அரசியல், கல்வி ஒழுக்கவியல், சமயவியல் என பல்வேறு கூறுகளுடன் தொடர்புடைய சிந்தனைகள் உலகவில் உய்ய எல்லாப் பண்பாட்டினரும் பேணிப்பாதுகாத்து வருகின்றனர். இந்நிலையில் தமிழர்களின் முதன்மையான வாழ்வியல் சிந்தனைகள் அவர்கள் தம் சமய வாழ்வியலுடன் இணைந்து காணப்படுகின்றன. இச்சமயச்சார் தத்துவ சிந்தனை மரபானது பண்டைத் தமிழர் வாழ்வு தொடக்கம் இன்றுவரை தனித்துவமாகப் பேணப்பட்டு வருகின்றது. இந்த வகையில் இவ்வாய்வுக்கட்டுரையானது திருவாசகத்தில் புலப்படும் சாயுச்சிய சிந்தனைகள் பற்றி ஆய்வு செய்வதாக அமைகின்றது.

தமிழர் சிந்தனை மரபில் சைவசித்தாந்த சிந்தனை மரபிற்கு தனித்துமான இடமுண்டு. சைவசித்தாந்த சிந்தனைக் கருத்துக்கள் சோழர் காலத்தில் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள் வழியே தத்துவ சிந்தனைக் கோட்பாடாகப் பரிமாணம் அடைந்தாலும் அச்சிந்தனைக் கருத்துக்களின் ஊற்றுக்கள் செவ்விலக்கியங்களிலும் அற இலக்கியங்களிலும், பக்தி இலக்கியங்களிலும் பரந்தளவில் பரவிக் காணப்படுகின்றன. இந்த வகையில் பக்தி இலக்கியங்களில் ஒன்றான திருவாசகத்தில் புலப்படும் சாயுச்சிய சிந்தகைகளை இவ்வாய்வு மையமாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

சைவ சித்தாந்தத்தில் முப்பொருள் உண்மை முதன்மையானது. பதி(இறைவன்), பசு(ஆன்மா), பாசம்(மும்மாங்களி) என்பனவாகும். இவற்றுள் ஆன்ம தத்துவத்தில் முதன்மையான ஆன்ம முத்தியாகும்

இது இந்து தத்துவ மரபில் முதன்மையானது. இதனை ஆன்ம ஈடேற்றம், ஆன்ம விடுதலை, ஆன்ம வீடுபேறு என்றெல்லாம் குறிப்பிடுவார்கள். திருவாசகத்தில் ஆன்ம விடுதலை பற்றிய கருத்துக்கள் வெளிப்படுகின்றன.

சைவசித்தாந்தத்தில் முத்தி பற்றிய கருத்துகள் நான்கு நிலையில் குறிப்பிடப்படுகின்றன. சாலோகமுத்தி (இறைவனுடைய உலகத்தில் இருத்தல்), சாமீப முத்தி (இறைவனுக்கருகில் இருத்தல்), சாரூப முத்தி (இறைவனுடைய ரூபத்தில் இருத்தல்), சாயுச்சமுத்தி (இறைவனாக இரண்டறக்கலந்திருத்தல்) என்பனவாகும். இவை நான்கு வகை மார்க்கங்களாகும். அதாவது சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகை நெறிநின்று தசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனும் மார்க்கங்களின் வழியே மேல் குறித்த முத்திகளை ஆன்மா அடைகின்றது. இந்த நான்கு நெறிநின்று வீடு பேறடைந்தவர்கள் அப்பர், சம்பந்தர் சமய குரவர்களாக போற்றப்படுகின்றார்கள்.

கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாண்டிய மன்னனுடைய முதல் மந்திரி இறைவனை ஞானநெறி நின்று சன்மார்க்கத்தின் வழியே சாயுச்சிய முத்தி நிலையை அடைந்தவர். இவருடைய பாடல்கள் 8ஆம் திருமுறையில் திருவாசகம் என்றும் பெயரால் போற்றப்படுகின்றன. "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது பிரபல்யமான தமிழ்த் தொடர் மரபாகும். மேற்குலக பாதிரியார் G.G pope என்பவர் திருவாசகத்தில் மூழ்கித் திளைத்த வெளிநாட்டவர்.
சாயுச்சிய நிலையை அடைதலே ஆன்மா இறைவனளிக்கும் பெரும்பேறாகக் கொண்டது. சாயுச்சியம் பற்றி திருமூலர் மிகவும் அழகாக பின்வரும் திருமந்திரப் பாடலின் ஊடாக எடுத்துரைத்திருக்கின்றார்.

"சாற்றரிது ஆகிய தத்துவம் சிந்தித்தால்
ஆற்றரிது ஆகிய ஐந்தும் அடங்கிவிடும்
மேல் திகழ் ஞானம் விளக்கொளியாய் நிற்கும்
பாற்புற சாயுச்சம் ஆகும் பதியே" (திருமந்திரம் 1442)

ஐம்புலனறிவுகளும் இறையருளால் உயிரின் வழியே சென்று அடங்கி விடும். அதன் பயனாக மெய்யறிவு என்னும் ஓங்கிய பெருஞ்சுடர் விளக்கின் சுடர்போல் ஒளி வீசும். அப்போது மேலான சாயுச்சியத்தை உயிரடையும்.

சிவபுராணம் தொடக்கம் அச்சோதிப்பதிகம் வரையாக 51 பதிகங்களிலும் மாணிக்கவாசகரின் சாயுச்சிய முத்திநிலை அனுபவம் வெளிப்படக் காணலாம். மாணிக்கவாசகரால் சிவபுராணம் திருப்பெருந்துறையில் பாடப்பெற்றது. 95 அடிகளைக் கொண்ட சிவபுராணமே திரு வாசகத்தில் முதலாவதாக இடம் பெறும் பதிகமாக அமைகின்றது.

சிவபுராணத்தின் முதலிரண்டு அடிகளிலேயே சிவத்தினுடைய அருட்திறத்தினையும் சிவத்தோடிகளையும் பேறின்ப பேற்றினையும் விளக்கும் வகையில் அமையப்பெற்றுள்ளமையை காணமுடிகின்றது.
"நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க" (சிவபுராணம் 1-20)
மாணிக்கவாசகர் பிறிதொரு இடத்தில் இறைவனுடைய பேராற்றலை வியந்து போற்றும் போது "பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழங்கள் வெல்க" "மாயப்பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி"
"பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்" (சிவபுராணம் 7,14,48) என்று குறிப்பிடுகின்றார். ஆன்ம விடுதலை என்பது பிறவியை வேரறுக்கச் செய்தலுக்கு ஒப்பானது.

சிவபுராணத்தில் பின்வரும் பாடல் பகுதிகயின் வழியே சாயுச்சிய முத்திநிலையின் பேரார்வத்தின் முழுமையாக வெளிப்படுத்திக் காணலாம்.

"மெய்யேயுன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்"
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்த கன்ற நுண்ணியனே"
(சிவபுராணம் 32-35)

அவை இருளில் கிடந்த நான் உடம்பு எடுத்து உழன்று பக்குவம் வந்தகாலை உன் திருவடியை அண்டிப்பிழைக்கும் வண்ணம் முதுமொழி வடிவாய் நின்ற உண்மையனே, அறிவு நூல்கள் நின்றுடைய பேரளவின் காணமாட்டாது ஐயனே என்றவற, அவற்றின் எல்லையைக் கடந்து உயர்ந்தும் தாழ்ந்து விரிந்தும் விளங்குகின்ற பெருமையனாய் அவற்றால் காண வெண்ணாத நுட்பம் பொருளாய் எவற்றிலும் கலந்துள்ளவனே, உன் அழகிய திருப்பாதங்களே இப்போது காணப்பெற்று பாசநீக்கம் அடைந்தேன் என்று மாணிக்கவாசகர் சிவபுராணத்தில் பாடியிருப்பது அவரடைய சாயுச்சிய முத்தி நிலையை காட்டுகின்றது.'

முத்தி நிலையில் ஆன்மாவைப் பிடித்திருந்த மும்மலங்கள் அகன்று விடும். சைவசித்தாந்த தத்துவத்தில் ஆன்ம ஈடேற்றத்தில் கன்மமும் மாயையும் அகன்றுவிட ஆணவம் ஆன்மாவில் அடங்கும் போதுதான் முத்திநிலை ஏற்படும். இதனையே மாணிக்கவாசகர் "வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க" (சிவபுராணம் 6) அதாவது ஆணவமலத்தின் வெம்மைத் கெடுத்து ஆண்டருளிய இறைவன் என்று பாடியிருப்பது மாணிக்கவாசகரின் சாயுச்சிய முத்தி நிலையினை வெளிப்படுத்துகிறது எனலாம்.

சாயுச்சிய முத்தி நிலை பாசங்களால் பிடிக்கப்பட்ட துன்பங்களிலிருந்து விடுபட்டு பேரின்ப நிலையை அடைதலே ஆகும்.

வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்மையா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானான்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாரமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே"

(சிவபுராணம் 84-88)

ஐம்பொறிகளின் குடிசையாகி எடுத்த உடம்பின் பந்தத்தினை அழிக்க வல்லானே என்று இறைதிருவருளை வியந்து அத்திருவருளின் வழியே அடையப்பெறும் சாயுச்சிய முத்தி நிலையை உணர்ந்து பாடியிருப்பதனை அறியமுடிகின்றது.

இங்கு சாயுச்சியம் பற்றிய திருமந்திரக் கருத்தினை குறிப்பிடுதல் சாலச் சிறந்ததாகும்
"சாயுச்சம் சாக்கிரா தீதம் சாருதல்
சாயுச்சியம் உபசாந் தத்துத் தாங்குதல்
சாயுச்சியம் சிவம் ஆதல் முடிவிலாச்
சாயுச்சிய மனத்து ஆனந்த சக்தியே"
(திருமந்திரம் 1513)

உயிரானது தன்னை மறந்த நிலையில் மிக விழிப்புடன் இருத்தல் இறைபேறாகும் என்ற திருமந்திர சிந்தனையானது திருவாசகத்தில் முதன்மையான சிவபுராணத்தில் விரவிக் கிடக்க காணலாம்.

# திருமந்திரம் அனுபவ
# 'ஞானத் திருநூல்'



சுகந்தி, இந்துசேகரன்

சைவசமயத்தவர்களாகிய நாம் நாட்டுநிலைமை காரணமாக எமது தாய் நாட்டை விட்டு வெளியேறிப் புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இங்கு அதாவது இங்கிலாந்தை எடுத்துக்கொண்டால் பற்பல கலை கலாச்சார வகுப்புக்கள், சைவக் கோயில்கள், யோகா நிறுவனங்கள், முதியோர் கல்வி நிலையங்கள், ஆன்மிக நற்சிந்தனை மன்றங்கள், சமய வகுப்புக்கள் என்று பல்வேறுபட்ட நிறுவனங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றுள் சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்கான அரும் பெரும் பணியாற்றி வருகின்றது கிழக்கு இலண்டனில் அமைந்துள்ள சைவமுன்னேற்றச் சங்கம். அங்கு திருமுறை வகுப்புக்கள், இசை வகுப்புக்கள், நற்சிந்தனைகள் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இவற்றுள் குறிப்பாகச் சைவசித்தாந்த வகுப்பு நடைபெற்று அதற்குரிய நிறைவு விழா சிறப்பாக நடைபெற்றது. அதற்கான அழைப்பிதழ் எனக்கும் வந்திருந்தது. எனவே நான் அதற்காக அந்நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தேன். அங்கு ஒரு சில பேரறிவாளர்களின் ஆன்மீகச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. அவர்கள் பற்பல ஆன்மீகக் கருத்துக்களை மிகத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். கேட்பதற்கு மிகவும் ஆனந்தமாக இருந்தது.

அத்துடன் அடுத்து நாம் ஒரு திருமந்திர வகுப்பை நடாத்த எண்ணியுள்ளாகவும் கூறினார்கள். எனவே அப்போது எனது மனதில் ஓர் எண்ணம் தோன்றியது, நானும் இதில் கலந்து கொள்ள வேண்டும், திருமந்திரம் என்றால் என்ன, அதில் எதைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது, எல்லாவற்றையும் அறிநத்து கொள்ள வேண்டும் என்ற ஓர் ஏக்கம் எனது மனதில் உருவானது. எனவே நான் அப்பொழுது தொடக்கி வைக்கப்பட்டுள்ள திருமந்திர வகுப்பில் சேர்ந்து கொண்டு கற்க ஆரம்பித்தேன். அன்றில் இருந்து எனக்கு அவற்றை முழுமையாக அறிய வேண்டும், தெளிவாகக் கற்க வேண்டும் என்ற ஒரு தேடல் எனக்குள் உருவாகியதை நான் உணர்ந்து கொண்டேன். எனவே நான் திருமந்திரத்தை மிகவும் ஈடுபாட்டுடன் கற்க ஆரம்பித்தேன்.

நமது தமிழ்ச் சமுதாய வளர்ச்சியில் சித்தர்களின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இவர்களின் இலக்கிய ஆக்கம், கனிவான கருத்துச் செறிவு என்பன சமூக நலனைப் பாதுகாத்து வளர்ப்பதாகவும் உள்ளது. அறிவை அறிவால் அறிந்தவர்கள் சித்தர்கள். இவர்கள் உலகியலைத் துறந்தவர்கள். உலகியல் நட்புக்கு மாறானவர்கள். வெட்டவெளி தன்னை மெய் என்று உணர்ந்தவர்கள். சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள். இந்துக்கள் ஆடுவதில் வல்லவர்கள். உலகம் அனைத்துமே சிவமயமாகக் கண்டவர்கள். யான், எனது என்கின்ற ஆணவத்தை அறுத்து உன் ஒளியாகிய பரம் பொருளை உணர்ந்தவர்கள். தியானத்தில் இருப்பவர்கள். இத்தகைய ஞான நிலையைக் கடுந்தவத்தின் மூலமாகத்தான் உணர்ந்து கொள்ள முடியும்.

திருமந்திரம் திருமூலரினால் இயற்றப்பட்ட ஏடு ஞான நூலாகும். திருமூலர் அட்டமா சித்திகள் பெற்ற தவயோகி என்றும், யோக நிட்டை புரிந்து மூவாயிரம் ஆண்டு காலம் வாழ்ந்து ஆண்டுக்கொரு பாடல் என்று மூவாயிரம் தமிழ்ப்பாடல்களைப் பாடினார் என்றும் அவையே "திருமந்திரம்" எனவும் கூறப்படுகின்றது.

ஞான நூல்களைக் கற்றல், அவற்றைப் பிறரையும் படிக்கச் செய்தல், அதன் பொருளைப் பிறருக்குப் புரியவைத்தல், நாம் கேட்டது, கற்றது ஆகியவற்றைப்பற்றிச் சிந்தித்தல் போன்ற "எழில் ஞான" தத்துவத்தினைத் திருமந்திரம் நன்கு உணர வைக்கின்றது. எனவே திருமந்திரம் அனுபவ "ஞான திருநூல்" என்று போற்றப்படுகின்றது. மோனத்தில் இருந்து உருவான தவமொழிகளே திருமந்திர அருட் பாடல்களாகும். தான் பெற்ற இறை அனுபவங்களைப் பிறரும் பெற வேண்டும் என்ற கருணையின் வெளிப்பாடே திருமந்திரம் ஆகும். இது "தெய்வத்தின்மை வாய்ந்த மறை பொருள்" என்ற பொருளில் விளங்குகின்றது. ஞான வாழ்க்கைக்கான நெறிமுறைகளை எடுத்துக் கூறுவதில் இந்நூலுக்கு ஒப்பாக வேறு எந்த நூலையும் எடுத்துக்கூற முடியாது.

கல்விக்குள் சிறந்த கல்வியானது "கடவுளைப் பற்றி அறியும் கல்வியே" எனவே, இதைக் கற்றுத் தேறுங்கள் என்பதே திருமந்திரம் கூறும் முக்கிய கோட்பாடாகும். தான், தமிழைச் செய்வதற்கென்றே இறைவன் தன்னைத் தோற்றுவித்துள்ளான் என்று, தன்னைத் தானே உணர்ந்து கொண்ட திருமூலர் -

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்

தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்ற அடிகளால் இறைவனில் கலந்து வாழ்தலே தமிழ் வாழ்வு எனத் தெளிவாக எடுத்துக் காட்டினார். இவ்வரிகளால் இறைவனுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பையும், தமிழ் மேல் இறைவன் கொண்டிருந்த மாறாத காதலையும் திருமந்திரத்தின் மூலம் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

திருவள்ளுவர் கூறிய தென்தமிழும், திருமூலர் ஓதிய தீந்தமிழும், இளங்கோ அடிகள் இயம்பிய இன்தமிழும், நால்வர்கள் பாடிய நற்றமிழும், சேக்கிழார் பாடிய தெய்வத்தமிழும், ஆண்டாள் அளித்த அமிழ்தத் தமிழும், நம் ஆள்வார் நவின்ற நற்றமிழும், கம்பர் கழறிய கன்னித்தமிழும், அருணாகிரிநாதர் அளித்த அருந்தமிழும், தாயுமானவர், பகழிக் கூத்தர், குமர குருபரர் முதலிய பெருமக்கள் வழங்கிய கண்டமிழும், வள்ளவார் வழங்கிய வண்டமிழும் உலகை வாழ்வித்தவை இவற்றுள் திருமூலர் ஓதிய தீந்தமிழ் முதன்மையானது என்றால் மிகையாகாது.

1. "யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை

யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை

யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி

யாவர்க்குமாம் பிறர்க்கு இன்றுரை தானே"

அனைவரும் செய்யக்கூடிய எளிமையான அறத்தைக் கூறுகின்ற இப்பாடல் என்றுமே யாராலும் கடைப்பிடித்து நடக்கக்கூடியதாக உள்ளது.

2. "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்

அன்பே சிவமாவது ஆகும் அறிவிலார்

அன்பே சிவமாவது ஆகும் அறிந்த பின்

அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

ஆன்ம தெளிவில்லாதவர்கள் அன்பையும், சிவத்தையும் வேறு வேறாகப் பிரித்துப் பார்ப்பார்கள். இறையன்பை உணர்ந்து ஆன்ம தெளிவுற்றவர்கள் தம்மிடத்தில் உள்ள அன்பையே சிவமாகத் துலங்குவதாக உணர்ந்து கொள்வார்கள். "அன்பேசிவம்" என்கின்ற மூலக்கருவை உணர்த்துப் இத்திருப்பாடல் என்னை நன்கு தெளியவைத்துள்ளது. அதாவது, அதை உணர்ந்து கொள்வதிற்கு நாம் எமது மனத்தை ஒரு நிலைப்படுத்தவதற்காகத் தொடர்ந்து ஆன்மீக நூல்களைக் கற்றும், எமது ஆன்மீக் சிந்தனைகளை வளர்த்தும் கொள்ள வேண்டும என்பதைத் திருமந்திரம் உணர வைக்கின்றது.

3.   "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினையின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதியில்லைநூத் நித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைத் துய்மினே"

இப்பாடல் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற திருமந்திரத்தின் உட்கருவான விழுமியப் பொருளைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது.

4.   "தேனுக்குள் இன்பஞ் சிவப்போ கறுப்போ
வானுக்குள் ஈசனைத் தேடு மதியனீர்
தேனுக்குள் இன்பஞ் செறிந்திருந்தாற் போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே"

5.   "மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தின் மறைந்தது மாமதயானை
மரத்தை மறைத்தது பார்முதிற்பூதம்
மரத்தின் மறைந்தது பார்முதிற்புதமே"

6.   "சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினையாளுர்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிவகரிதானே"

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இம் மூன்று திருமந்திரப்பாடல்களும் என்னைச் சிந்திக்கவும்., மனத்தைத் தெளிவுபடுத்தவும் வைத்துள்ளன, அத்துடன் திருமந்திரம் கற்றதால் எனக்குள்ளே ஓர் ஆன்மீகத் தேடல் உருவாகி உள்ளதை உணர்ந்து கொள்ள முடிகின்றது. எனவே எல்லோரும் ஞான நூல்களைக் கற்றும், அவற்றின் பொருள்களை அறிந்தும் நற்கதி அடைவோமாக.



திருமூலதேவநாயனார்

# மனதைக் கவரும் தந்திரம் திருமந்திரம்

நகுலேஸ்வரன் பொன்னையா,
திருமந்திரம், பட்டயப்படிப்பு மாணவர்,
Bromley, London.

"தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திரு வாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம் என்றுணர்"

வட மொழியில் வேத சிவாமங்களில் அனைத்துப் பொருள்களும் அடங்கியுள்ளன. இதற்கமைய வடமொழியல் வேதம் பொதுநூலாகவும், சிவாகமம் சிறப்பு நூலாகவும் விளங்குகின்றன. இதேபோல் தமிழில் திருக்குறள் பொதுவாகவும், திருமந்திரம் சிறப்பு நூலாவும் கூறப்படுகின்றது. இவ்விரண்டு நூல்களிலும் அனைத்துப் பொருட்களும் அடங்குவதாக அறியப்படுகிறது.

இக்கருத்தைக் கொண்டே ஔவையார் மேற்கூறிய பாடலை நல்வழியில் குறிப்பிட்டிருக்கின்றார். அநேக நூலாசிரியர்கள் திருமந்திரத்திற்கு உரை எழுதியுள்ளனர். திருக்குறளையும், திருமுறைகளில் உள்ள தேவார திருவாசகங்களையும் திருமுறைக் கருத்துக்களோடு ஒப்பிடத்தவறவில்லை.

திருமூலரால் எழுதப்பட்ட திருமந்திரம் 10ம் திருமுறையாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. திருமந்திரம் 3000 மந்திரங்களைக் கொண்ட நூலென்றும், 3000 வருடங்களில் வருடமொன்றுக்கு ஒன்றாக, ஒவ்வொன்றும் தியானத்திலிருந்து விரித்துக் கூறப்பட்டவைகள் என்றும், 9 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றம் அதாவது ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு தந்திரம் என அழைக்கப்படுகின்றது.

இங்கே எல்லோருக்கும் மனதில் கேள்வி எழாமல் இருக்க முடியாது. 3000 வருடங்கள் மனிதன் வாழ முடியுமா என்பதுதான் அக்கேள்வி. இது கால அளவின் அலகோடு சம்பந்தப்பட்ட விடயமாகக் கூறப்படுகின்றது. அதாவது, திருமந்திரம் இயற்றப்பட்ட காலம் தேவ ஆண்டென்றும் அதில் ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு வருடமாக கணிக்கப்படுவதாக அறியக்கிடக்கிறது. எனவே 3000 தந்திரங்களிலும் 30000 நாட்களில், ஒவ்வொரு நாளும் தியானத்திலிருந்து எழுந்த திருமூலரால், கூறப்பட்டவைதான் திருமந்திரம் என்பது முடிவாகிறது.

இந்நூல், தோத்திரநூல், சாத்திரநூல், மந்திரநூல், தந்திரநூல், மெஞ்ஞான நூல், விஞ்ஞான நூல், இம்மையும் மறுமையும் காட்டும் செம்மை வாய்ந்த நூல், யோகநூல், போகநூல், மருத்துவ நூல், சித்த நூல், இன்னும் வியத்தகு கருத்துகள் பலவற்றை விளக்கும் அரிய நூலாகும். இலக்கியமும் வரலாறும் திருமூலரை 5ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தாரென்பதைத் தெளிவுறக் காட்டுகின்றன. எக்காலத்தில் இருந்தவர்களாயினும். இம்முனிவர் பெருமான் இவ்வுலகம் உள்ளவரை வாழ்வார் என்பதில் ஐயமில்லை.
வள்ளுவர் பெருமானின் திருக்குறள் திருமந்திரத்தைவிட முந்திய காலத்து நூலாக இருந்தாலும், எழுத்துருவம் பெறும் ஒரு நூலாக தமிழ்மறையாகிய திருக்குறளுக்கு முந்திய காலத்தே தோன்றி விட்ட நூலாக திருமந்திரம் அறியக்கிடக்கின்றது. திருமந்திரம், திருமந்திரமாலை, தமிழ் மூவாயிரம் எனவும் வழங்கப்படுகினறது. ஒன்பது தந்திரங்களாகப்

பிரிக்கப்பட்ட திருமந்திர நூலானது ஒவ்வொரு பிரிவும் கூறும் தலைப்புக்ளைப் பார்ப்போமாளால்,

முதல் தந்திரத்தில் : ஞானோபதேசம் வலியுறுத்தப்பெறுகிறது. யாக்கை, இளமை, செல்வம், உயிர் ஆகியவற்றின் நிலையாமை கொல்லாமை, கள்ளுண்ணாமை, அறம், அன்பு, கல்வி, கேள்வி போன்ற எச்சமயத்தார்க்கும் பொதுவான அறங்கள் பேசப்படுகின்றன.

இரண்டாவது தந்திரத்தில் : அன்பர்கட்கு ஆண்டவன் அருள் புரிந்தமை, ஐந்தொழில், சிலபல புராணக்கதைகளும் இடம் பெறுகின்றன.

மூன்றாவது தந்திரத்தில் : அட்டமா சித்த அட்டாங்க யோகம், சோதிடம், யோகப்பிற்சி பற்றிய செய்திகள், வீட்டு நெறிக்குரிய வழிகள் விளங்கப்படுத்தப்படுகின்றன.

நான்காம் தந்திரத்தில் : மந்திர நூற்கருத்துக்கள், சக்கரங்கள் பற்றிக் கூறப்படுகின்றன. சிவசக்தி வழிபாடு சிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாம் தந்திரம் : சரியை, கிரியை, யோகம் ஞான மார்ககங்கள் பற்றிய செய்திகள், சைவ சமயபேதங்கள் காணப்படுகின்றன. சைவசித்தாந்தம் என்னும் சொல் வருகின்றது

ஆறாம் தந்திரம் : சிவகுரு தரிசனம், திருவடிப்பேறு ஞானாபதேசத் துறவு, தவம், வேடம், நீறு ஆகியன விளக்கப்படுகின்றன.

ஏழாம் தந்திரம் : சிவபூசை, குரு பூசை, மகேசுர பூசை, அடியார் பெருமை, போசன விதி, இந்திரிய அடக்கம், சமாதி சற்குரு பற்றி இங்கு விளக்கப்படுகின்றன.

எட்டாந்தந்திரம் : காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மாயை பக்தியுடைமை, புறங்கூறாமை போன்றன பகரப்பட்டுள்ளன.
"தத்துவமசி" ( அது நீயாக இருக்கின்றாய்,) என்னும் மகாவாக்கியம் இதிலே இடம் பெறுகின்றது.

ஒன்பதாந்தந்திரம் : ஐந்தெழுத்தின் பேதங்கள், சிவதரிசனம், சித்திமார்க்கம், முத்தி மார்க்கம் பற்றியனவும் இடம்பெறுகின்றன. தத்துவ ஞானத்தின் நிலை அறிந்தபின், தத்துவமற்ற சிவநிலை பெறுதலை உணர்த்துகிறது.

சித்தாந்த சாத்திரம் தோன்றுவதற்கு முன் சைவசமய முதல் நூலாக விளங்கியது திருமந்திரம், சித்தாந்தம் என்னும் சொல்லையே முதலில் அறிமுகப்படுத்தியது திருமந்திரமேயாகும். இந்நூல் தேவார மூவருக்கும் முந்தியதாகவும், சிறந்த ஆகமமாகச் சைவரால் போற்றப்படுவதுமென அறியக்கிடக்கிறது.

திருமந்திரத்தின் சாராம்சம் அன்பே சிவமென்பதாகும். அன்பு என்பது, அகத்தே உணரும் மென்மையான உணர்வு இதற்குப் புறவடிவமென்று ஒன்று இல்லை, அன்பு ஒருவனை உந்த அவன் ஆக்கந்தரும் செயலில் ஈடுபடுவான். அதுவே அன்பின் அடையாளமாகும். அன்பு தெரிந்தவர்களிடையேயும், பழகியவர்களிடையேயும் மலரக்கூடியது. ஆனால் அருள் என்னும் அன்பின் குழவி எல்லா மனிதர்களிடையேயும் வேறுபாடில்லாது தோன்றுவது உலகில் அன்புடையோர் பலர் அருளுடையோர் மிகச் சிலரே.

இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியது யாதெனில், கோழிக்குஞ்சுக்குக் காட்டுவது. பசு கன்றுக்குக் காட்டுவது, தாய் பிள்ளைக்குக் காட்டுவது அன்பல்ல அவை கடமை என்று

சொல்ல முடியும். சிலுவையில் அறைந்த போது தன்னைத் துன்பப்படுத்துவர் மேல் கோபங்கொள்ளாது, "அவர்கள் அறியாமல் செய்கின்றார்கள், அவர்களை மன்னித்து விடும் பிதாவே" என்று அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்த யேசுவிடம்தான் உண்மையான அன்பு (அருள்) காண முடிகின்றது.

அன்பு இல்லாமல் அறமில்லை, அருளும் இல்லை, இன்பமும் இல்லை, இந்தத்தூய அன்பே சிவமாகும். இதுவே திருமூலர் தன்நூலில் சித்தரிக்கம் அன்பாகும். இந்த அன்பைப் பற்றி அறியாதவர் அன்பு வேறு, சிவம் வேறு என்பர். அறிந்தவர் தம்மிடத்திலுள்ள அன்பையே சிவமாகக்காண்பர், மனிதனுக்குப்பக்தியினாலும் யோகப்பயிற்சியினாலும் இறைவன் பால் ஏற்படும் என்பு இறையின்பு எனப்படும். இதை திருமூலர்,

அன்பும் சிவமு மிரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

என்னும் திருமந்திரப்பாடல் மூலம் அன்பும் சிவமும் இரண்டல்ல ஒன்றே என்று வியக்கின்றார்.

அன்பே சிவம், அன்புற்றமர்தலே சிவம், ஒன்றே குலம் ஒருவனே தேவன், யான் பெற்ற இன்பம் பெறும் இவ்வையகம், என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமமிழ் செய்யுமாறே என்ற சொற்தொடர்களும் இன்னும் பல இது போன்ற சொற்றொடர்களும், திருமந்திரத்தில் சொல்லப்பட்டவை என்று தெரியாமலே, சொற்பொழிவுகளிலும் நாம் பேசக்கூடியதாக இருக்கிறது. இச்சொற்றொடர்களைக் கையாள்பவர்கள் இச்சொற்றொடர்கள் ஔவையாராலோ, திருவள்ளுவராலோ சொல்லப்பட்டவை என்ற கருதிக் கொள்வார்கள். இவை எல்லாவற்றிற்கும் முந்திய காலத்திலேயே எழுத்துருவில்லாமல் பேச்சுவழக்கில் கலக்கப்பட்டவை திருமந்திரச் சொற்றோடர்கள் என்ற உண்மை புலப்படுகின்றது.

தான் பெற்ற இறை இன்பத்தை இந்த உலக மக்களும் பெற்று துன்பத்திலிருந்து விடுபட்டுப் பேரின்பத்தை அடைய வேண்டுமென்பதைக் கருதி இந்நூலைத் திருமூலர் படைத்தார். இதை ஒரு தந்திரத்தில் குறிப்பிடும் விதம் மகிழ்ச்சியைத் தருகின்றது. 5ம் நூற்றாண்டுக்கு முந்திய காலத்திலேயே பொது உடமையை நேசித்தவர் திருமூலர்.

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான் பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப்பற்றத் தலைப்படும் தானே..

அன்புற்றமர்தலே சிவம். அதன் வெளிப்பாடு பகிர்வு. நா்ன பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம். அறிவை, ஆற்றலை, அசல்வத்தை, அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான அனுபவ வழிகாட்டல். தொல்காப்பியர் இந்தப் பகிர்தல் என்பதையே வாழ்வின் பயனாக்க கூறுகிறார். வான் பற்றி நின்ற உணர்வுறு மந்திரத்தைக் கேட்கையில் , ஒன்றாயும், உடனையும், வேறாகவும் ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம் பிரணவம் என்பது அறியப்படும். இறைவன் என்னுள்ளேயே உள்ளான் என்பதை அறிய அறிய உயிர் அவனையே பற்றிப் பற்றி அவனைச் சாந்து அவனே தானோ ஆகி ஜீவ பரமாத்ம ஐக்கியம் நிகழும்.

இங்கு நான் பெற்ற இன்பம் என்று திருமூலர் குறிப்பிடுவது வான்பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடுதலாகும். இப்படியான மறை பொருளைக் கற்றுத் தெளிந்தவர்கள் பெறும் இன்பமானது, இந்த இலௌகீக உலகில் ஒரு ஆணும் பெண்ணும் பெறும் இன்பத்தின் உயர்

நிலையை அடைதலுக்கு ஒப்பானது என்பதை ஒரு தந்திரத்தின் மூலம் திருமூலர் குறிப்பிடுவதைப் பார்க்க முடியும்.

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்கள்
அகத்தின் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனேடு ஆடிய
சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமாறு எங்ஙனே.

குருவின் சிவானுபவத்தைச் சீடன் கேட்பது, தாயின் இன்ப அனுபவத்தைப் பற்றி மகள் கேட்பது போலாகும் என்று திருமூலர் குறிப்பிடுவது, இறை அனுபவம் என்பது அனுபவித்து அறிய வேண்டிய தொன்று என்பதை வலியுறுத்தப்படுகின்றது என்பதை உணர்த்துவதே

பின்னை நின்று என்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

பிறவிக்கும் காரணம் தவம் செய்யாமை. உற்றநோய் தோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை சற்றே தவத்திற் குரு. (குறள் 261) தவமென்பது, உணவை ஒறுத்தலால் தனக்கு வரும் துன்பத்தை தாங்குவதும், மற்றய உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையுமே தவமென்றது. என்னை நன்றாகப்படைத்தது. தன்னுள் அமிழ்ந்து அவனாலேயே நான் செயல்படுத்தப்படுகின்றேன் என்பதை உணர்தலே தமிழ் செய்தலாகும். பிறப்பெனும் பேதமை நீங்கச் சிறப்பெனும் மெய்ப்பொருள் காண்பதறிவு. (குறள் 358) வீட்டுப்பேற்றுக்கு நிமித்த காரணமான செவ்விய பொருளைக் கண்டறவதே உண்மை அறிவாகும்.

ஐம்புலன்களையும், புவன போகங்களையும் செம்மை நெறியில் நின்று அனுபவித்துத் திருவருளைப் பெற வேண்டுமென்று கூறும் திருமூலர், உலக வாழ்வை வெறுத்தவரன்று.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்.
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

உடம்பு திருவடி உணர்வு பெறுதற்பொருட்டே தரப்பட்டது. அதனை வீணே அழிய விட்டால், பால் கலத்தை பால் உண்ண முன்பே உடைப்பதற்கு ஒப்பானதாகும். அவ்வுடம்பை மெய் உணர்வு வழியில் பழக்கி அத்திருவடி உணர்வைப் பெற வேண்டும். திருவைந்தெழுத்தை இடைவிடாது என்னால், உடம்பை வளர்க்கும் உபாயமாகும்.

உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக்குள்ளே யுறு பொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே

பாற்கலத்தைப் பாலைப் போல் பேணுவதைப் போல், உடம்பினுள் சிவன் உயிராக்க கொண்டுயின் என அறிந்து, அதனை அவனுடமை என்று பேணுகின்றேன். இவ்வுண்மையை உணராத காலத்தில் உடம்பை இழுக்கென்று எண்ணியிருந்தேன், என்று உடம்பைப் பற்றிக் கூறிய திருமூலர் தொடர்ந்தும்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

எங்கள் உள்ளத்தையே வசிப்பிடமாகக் கொண்ட சீவனே, திருவருளால் மெய்ப்பொருளை உணர்ந்தவர்களுக்குச் சிவலிங்கமாகும். கண், வாய், முதலிய ஐந்து புலங்களும் சுச்சிவலிங்கத்தை அலங்கரிக்கும் அழகிய விளக்குகளாகும். என்பதை திருமூலர் குறிப்பிடுகின்றார்.


உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம் விட்டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உரு அறியாதே.

உயிருக்கு உயிரால் உள்ளங்ள தோறும் நீங்காது நிற்கின்சிவனே உள்ளத்தை விட்டு ஓர் அடி கூட நீங்காமல் நிற்பவன், உள்ளமாகிய உயிர் தன் சிற்றறிவினாலும், சுட்டறிவினாலும் சிவனாகிய உள்ளத்து ஒருவனைக் காண மாட்டாது. அவனைக் காண வேண்டிய முற்றறிவை சிவனாகிய அவனே வெளிப்படுத்த வேண்டும் அது வரை உயிர், உடனிருக்கும் சிவனே அறியமாட்டாது என்பதைத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

முழுமுதற் பரம்பொருள் அடைவதற்குக் குருவின் திருவருள் இன்றியமையாதது என்பதை வற்புறுத்திக கூறுவது இந்நூல் குருவே இறைவன். இறைவனே குரு என்பதை உணர்த்துவது திருமந்திரம், சுட்டிக்காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலுமு வராது என்பது போல் குருவால் உணர்த்தப்படாத எந்த ஞானமும் சித்தி தராது.
இதை உணர்த்துவதாக,

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென்பது குறித்து ஓரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர்வு அற்றதோர் கோவே

இப்பாடல் அமைகின்றது.



# இறைவனையும் ஞானத்தையும் தேடவைக்கும் திருமந்திரம்

- சட்டத்தரணி செல்வ திரு

எனது தந்தையின் பெயர் செல்வரத்தினம். எனது தாய் தந்தையர் எனக்கு வைத்த பெயர் திருஞானம். ஆனால் இந்நாட்டுக்கு நான் வந்த போது எனது பெயரை இங்குள்ளோர் உச்சரிக்க முடியாமல் திணறியதால் நான் இரத்தினத்தையும் ஞானத்தையும் விட்டு என் பெயரை செல்வ திருவாக மாற்றி அமைத்துக்கொண்டேன். பின்னர் இந்த இரத்தினத்தையும் ஞானத்தையும் தேட வேண்டிய முக்கியத்தை திருமந்திரம் எனக்குக் காட்டியுள்ளது.

நாம் செய்யும் வினைப்பலன்கள் திஸ்டம், அதிஸ்டம் என இருவகைப்படும் நாம் எதைத்தேடிச் செய்கிறோமோ அது கிடைக்கும் போது திஸ்டபலம் எனக்கூறப்படும். ஆனால் நாம் செய்யும் பற்பல புண்ணியங்கள் ஒன்றாகக்கூடி சில வேளைகளில் எமக்கு மிகப்பெரிய பலங்களைக் கொடுக்கும். இதனை அதிஸ்டம் எனக்கூறலாம். எனக்கு திருமந்திரத்தைப்படிக்கும் ஆற்றலை இறைவன் அளித்ததை எனக்குக் கிடைத்த பெரும் அதிஸ்டமாக நான் கருதுகிறேன்.

இதற்கு காரணமாக இருந்த குருமாரை மறக்க முடியாது. சிறு வயதில் எனக்கு திருமுறை எனில் என்ன என்பதை படிப்பித்தவர் திரு வைரமுத்து ஆகும். இவர் தற்காலத்தில் இலங்கையின் 'கவனர் ஜெனரல்' ஆக இருந்த ஒலிவர் குணத்திலக்கவின் 'permanent secretary' ஆக இருந்தவர். திரு ஒலிவர் குணத்திலக்க அவர்கள் வெவ்வேறு மந்திரியாகவும் இருந்தவர். ஆனால் எங்கு சென்றாலும் திரு வைரமுத்துவையும் கூட்டிச்செல்வார். இதனால் 'Mary had a little lamb, and where ever Mary went the lamb was sure to go' என வைரமுத்து ஒலிவர் குணதிலக்க உறவைக் கூறினார். இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் மட்டுமன்றி சைவ சித்தாந்தத்தையும் கரைத்து குடித்தவர்.

அதன் பின் 12 வருடங்களுக்கு முன் எனக்கு ஒரு யோகி சுந்தர் அறிமுகமானார். இவர்சரிவர யோகாசனம், பிரணயோகம், தியானம், வாசியோகம் போன்றவற்றை எனக்குப் படிப்பித்துக் கொண்டிருக்கிறார். கிடத்தட்ட ஏழு வரடங்களுக்கு முன் திரு முரளி அவர்கள் திருமந்திரத்தை ஓரளவு எனக்குச் சொல்லித்தந்தார். அதன் பின் இப்போது திருமந்திரப் பட்டயச் சான்றிதழுக்காத் திரு. பற்றிமாகரன் அவர்கள் எடுத்துக் கொண்ட பெரு முயற்சியால் ஓரளவு திருமந்திரத்தைப் படிக்க முடிந்தது. நான் தினமும் எனக்கு முடிந்தவரை பிராணயோகம் தியானம் போன்றவற்றை கடைப்பிடிப்பது எனது வழக்கம். இதற்கு இந்த அறிவு மிகவும் உதவியாக இருக்கிறது. குறிப்பாக மனம் புத்தி சித்தம் அகங்காரம் எனில் என்னவென்பது குறித்த அறிவு பலவகைகளில் உதவியாக உள்ளது.

மேலும் நான் பலகாலகாலமாக வேதாந்தத்தைப் படித்துக் கொண்டு இருப்பவன் எனக்குச் சித்தாந்தம் சரிவரத் தெரியாது எனினும் திருமந்திரம் வேதாந்தத்தையும் சித்தாந்தத்தையும் சேர்த்து அங்கே உள்ள உண்மைகளைக் கூறியுள்ளது.

நீஅது ஆனாய் என நின்ற பேருரை
ஆயது நான் ஆனேன் என்னச் சமைந்துஅறச்
சேய சிவமாக்கும் சீர்நந்தி பேரருள்
ஆயதுவாய் அனந்த ஆனந்தியாகுமே

இதுவே வேதாந்த சித்தாந்த சமரசம் எனப்படும். தத்துவமசி எனும் குருமொழியைத் திருமூலர் விளக்கிய விதம் எனது உடலைப் புளங்காகிதம் கொள்ள வைக்கும். வேதாந்தமும் சைவசித்தாந்தமும் ஒன்றுக்கு ஒன்று சமமானவை என்பதை இது எடுத்துக்காட்டியுள்ளது. இங்கு எட்ட டுடியாது வெகுதொலைவில் உள்ளதாக எண்ணப்படும் சிவனை சீவனோடு பொருந்தச் செய்யும் மேலான நந்தியம்பெருமானின் திருவருளின் முறை கூறப்பட்டுள்ளது.

பட்டயச்சான்றிதழ்

இதனைப் படிக்கத் தொடங்கும் பொழுது எனக்கு மிகவும் பயமாக இருந்தது ஏனெனில் நாற்பது வருடத்திற்கு மேலாக நான் தமிழில் எதுவும் முறையாகப் படிக்கவில்லை. ஆனால் இதனைப் படிக்கத் தொடங்கிய பின்தான் எனது மனது இதன்பால் ஈடுபட்டது. கனவில் கூட இப்படித் தமிழில் எழுதுவேன் என எண்ணவில்லை. இதனால் நான் விடும் சொற்பிழைகளையும் மன்னிக்குமாறு பணிவாகக் கேட்டுக்கொள்கின்றேன். இப்படி என்னை முன்னேற்றியதற்கு நான் எனது ஆசிரியருக்கும் இதனை நடத்தும் பெரியோர்க்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன். இந்தப் பயிற்சி நூல் 3000 மந்திரங்களைச் சுருக்கி என்னைப் போன்றவர்களுக்கும் விளங்கும் விதமாக இலகுவாக இருந்தது. இப்படியான பேரறிவு கொண்ட பெரியோருக்கு ஒரு சிறிய வேண்டுகோள் ‘திருமந்திரத்தைச் சுருக்கி முன்னூறு பக்கங்களுக்குள் ஒரு புத்தகத்தைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதினால் என்ன. வேதாந்தத்தில் இப்படிப்பட்ட நூல்கள் உள்ளன. சைவசித்தாந்தத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. இந்நாட்டில் உள்ளவர்கள் இப்படிப்பட்ட நூலை விரும்பிப் படிப்பர். பெரிய புத்தகங்களை எழுதுவதால் இக்காலத்தில் எந்தப் பயனும் இல்லை. பாமரரும் விளங்கும் விதத்தில் சிறியதாகவும் எளிமையாகவும் எழுதினால் பெரும் வரவேற்பு இருக்கும். இந்நாட்டில் உள்ள நீதிபதிகள் மாதக் கணக்காகக் கேட்ட வழக்கில் அளித்த தீர்ப்பை ‘HELD’என ஒரு சிறிய பந்தியில் கூறியிருப்பர். இந்த நாமும் பின்பற்றலாம்.

மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே

எனத் திருமூலரே இந்த எண்ணத்துக்கு வித்திட்டுள்ளார். மூவாயிரத்தை முந்நூறு ஆக்கி, பின்னர் அதனிலும் சுருக்கி முப்பதாக்கி பின் மும்மூர்த்திகள் எனப் பொருள்பட மூன்றாக்கி கடைசியாக யாவும் ஒன்றே என்பதை இதனால் திருமூலர் தெளிவாக்கியுள்ளார். இத்தகைய திருமந்திரத்தை 300 பக்கங்களுள் எழுதும்படி பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

இந்து சமயத்தை மற்றைய மதங்களிலிருந்து வித்தியாசமாக காட்டுவது பின்வரும் திருமந்திரமாக விளங்குகிறது,

தெளிவு குருவின் திருமேனி காண்டல்

தெளிவு குருவின் திருநாமம் செப்பல்

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்

தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே (139)

இந்தபாடலால் ஆன்ம அறிவு என்பது இறைவனே குருவாக எழுந்தருளி எமக்கு எதிரே இருந்து போதிப்பதைக் காண்பதாலும் இறைவனின் நாமமாகக் குருவின் நாமத்தைச் செப்பலாலும் குருவின் வார்த்தையைக் கேட்பதாலும் இவை எல்லாவற்றையும் விட அந்தக் குருவுக்கும் குருவான இறைவனை மனதில் நினைந்து அவனுருவாக நாம் கும்பிடும் திருவுருவை மனதில் இடைவிடாது சிந்திப்பதாலும் பெறப்படும் ஞானம் என்பது தெளிவு பெறுகிறது. . அறிவு குரு பரம்பரையில் வாய்மூலம் சொல்லிக் கொடுக்கப்படும் ஒன்று.

'உப' எனில் கிட்ட 'நீ' எனனில் கீழே 'சிஷத்' எனில் இருத்தல். எனவே உபநிடதம் எனில் குருவிற்கு கீழே இருந்து படிப்பதைக் குறிக்கும். புத்தகப்படிப்பே போதும் எனும் இக்காலத்து மதங்களுக்கு இது எதிரானது.

எல்லோருக்கும் தத்தமது வாழ்க்கையில் அந்த அந்த நிலையில் சரியான குரு கிடைக்கும். ஆனால் அதனைப்பயன்படுத்துபவரோ சிலர். எனக்கும் அப்படித்தான் எனது இப்போதைய வாழ்க்கைக்கு திருமந்திரம் முக்கியம். குருவும் கிடைத்தார் வேறென்ன வேண்டும்

எழுதாத புத்தகத்து ஏட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெளிந்து இருந்து ஓத
மலராத பூவின் மணத்தின் மதுவைப்
பிறவாத வண்டு மணம் உண்டவாறோ (2885)

இறைவன் அருளிய திருமறை அவனே சொல். எவராலும் குறிக்கப்பட்டதல்ல. இதனை சக்தி தானே அறிந்து உபதேசம் செய்ததை இங்கு கூறப்பட்டுள்ளது.

இதற்கு இன்னுமொரு பொருளும் உண்டு யாதெனில் எழுதாத புத்தகமான வேதத்தை அதனை சரிவர விளங்காதவர் கதைப்பது மலராத பூவின் மணத்தின் மதுவைப் பிறவாத வண்டு மணம் மூலம் உண்டவாரே என்பதாகும்.. இக்காலத்துக்கு இது மிகவும் பொருந்துவது. பற்பலர் வேதத்துக்கு ஒப்பாமல் சொற்பொழிவு ஆற்றும் காலம் இது அதனை பின்பற்றுவரோ பல்லாயிரம். இந்த பேருண்மையை நகைச்சுவைப் பாணியில் நாங்கள் மேலே உள்ள பாடலில் கண்டோம்.

உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன்

உடம்பினுக்கு உள்ளே உறு பொருள் கண்டேன்

உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று

உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே (725)

என்பது திருமந்திரம். நான் படித்தமட்டில் உடம்புக்கு முக்கியம் கொடுப்பது சைவசித்தாந்தம். திருமந்திரம் உடம்பை எப்படி நாம் சரிவர பாவிக்கலாம் எனக் கூறுகின்றது. இதற்காக ஒரு முழு கேள்வித்தாளை உருவாக்கியவர்க்கு நன்றி.

இந்தமுறை எனக்கு மிகவும் பிடித்த ஒன்று நான் தினம் செய்வதும் கூட இதனால் எனது ஆற்றல் கூடுவதை நான் கண்டுள்ளேன். ஆனால் இதனை வாழ்நாள் முழுக்க செய்யாமல் விட்டதால் சில உடல் உபாதைகள் உள்ளன.

<u>ஆறு ஆதாரம்</u>

இவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை ஆகும்.

இந்த அறிவு தியாணம் செய்ய நான் முயலும் போது உதவியாக உள்ளது. செய்வதை பொருளுணர்ந்து செய்யும் போது பலனும் வேறு

<u>அட்டாங்க யோகம்</u>

இதனை நான் யோகி ராம் சுந்தரரிடம் கற்றுக் கொண்டேன். ஆனால் அதன் பொருளை விளக்கமாக இப்போது உணருகிறேன்.

<u>வாசி யோகம்</u>

'வாசி வாசி என்போருக்கு சிவா சிவா என்புகும்' என யோகி ராம் சுந்தர் திரும்பத்திரும்ப கூறியதற்கான காரணத்தை இப்போது ஓரளவு அறிந்து கொண்டுள்ளேன்

திரு பற்றிமாரன் அவர்கள் பிராயத்தம் எடுத்து இதனை எமக்கு படிப்பித்தார்கள். இது எனக்கு எனது இறை அறிவைக் கூட்ட மிகவும உதவியாக உள்ளது

திரு ராம் சுந்தர் அவர்கள் பிராணாயாமத்தை வாசி யோகத்திலிருந்த பிரித்து ஆரம்ப காலத்தில் சொல்லிக்கொடுப்பார். பின்னர் ஓரளவு அறிவைப் பெற்றவர்க்கு மட்டும் வாசியோகத்தை கற்றுக்கொடுப்பார். இதனைத்தினம் செய்ய நிர்ப்பந்திப்பார்

<u>பீஜ மந்திரம்</u>

ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் பொருளை படித்துள்ளேன். ஆனால் பீஜ மந்திரம் என்றால் என்ன என்பதை இப்போது தான் அறிந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்தது. மிகவும் ஆழமான உண்மைகளை இங்கே அறிந்தேன். ஒவ்வொரு சொல்லுக்கும் உள்ள மகிமையே பெரிது

சத்தத்தின் சொற்களைவிட தொனிவீச்சு முக்கியம் என்பதை பீஜ மந்திரம் உணர்ந்தும் சொற்கள் ஒரு சில காத தூரமே செல்லும் தொனிவீச்சு மிக தூரம் செல்லும் இதனால் ஆறு சக்கரங்களும் வித்தியாசமான பீஜ மந்திரம் உண்டு

சுவாதிஸ் தாணம் - லாம்

மணிப்பூரகம் - ராம்

அனாகதம் - யாம்

விசுஷ்டி - ஹாம் (Ham)

அன்ஜனம் - ஓம்

சகஸ்ரர - சத்தத்திற்கு அப்பாற்பட்டது

<u>ஆறந்தம்</u>

வேதத்தின் அந்தமும் மிக்க சித்தாந்தமும்

நாதத்தின் அந்தம் நற்போத அந்தமும்

ஓதத்தகும் எட்டு யோகாந்த அந்தமும்

ஆதிக்கலாந்தமும் ஆறு அந்தம் ஆமே

இந்த மந்திரம் "யாரும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கூற்றுக்கமைய அனைத்து மதங்களையும் கூட்டி அவை யாவும் இறைவனை அடையும் முறைகள் எனக்கூறுகிறது.

வேதாந்தம் - வேதத்தின் முடிவும்

மிக்க சித்தாந்தம் - மேலான சிவாக முடிவும்

நாதாந்தம் - நாத தத்துவங்களின் முடிவும்

போதாந்தம் - உயர்ந்ததான ஞான முடிவும்

யோகாந்தம் - போற்றவேண்டிய அட்டாங்கயோகத்தின் முடிவும்

காலாந்தம் - கலைகள் அத்தனையின் ( ஆக்கல், அழித்தல், அருளள், காத்தல், மறைத்தல்) முடிவும் ஆறு அந்தமாகும்

இந்த ஆறு அந்தங்களை அறிந்தவர் மேலான தூயநெறி நிற்கும் சான்றோராவர் என்பது திருமந்திரமாகும்.

அந்தம் ஓராறும் அறிவார் அதிசுத்தர்
அந்தம் ஓராறும் அறிவார் அமலத்தர்
அந்தம் ஓராறும் அறியார் அவர் தமக்கு
அந்தமோடு ஆதி அறிய ஒண்ணாதே (2371)

இப்படிப்பட்ட திருமந்திரத்தைப் படிப்பதற்கு உதவிய அனைவருக்கும் நன்றி

# திருமந்திர தத்துவங்களும் புலம் பெயர் தமிழர்கள் வாழ்வின் பணிகளுக்கு வழிகாட்டலும்

**இது ஓர் அனுபவ படிகம்.**

சித்தாந்தரத்தினம் திருமதி சொர்ணமலர் முருகையா B.A, ALA

பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகத் திகழ்வது தமிழ் மூவாயிரம் என்னும் திருமந்திரமாகும். இது மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. இது ஆண்டுக்கு ஒரு பாடலாக பாடப்பட்டது என்றும், திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவர் என்றும் கூறப்படுகின்றது. ஒன்பது தந்திரங்களும் ஒன்பது ஆகமங்களின் சாரமாக அமைந்துள்ளது. தமிழ் நாட்டில் பதினான்கு சாத்திர நூல்கள் தோன்றுவதற்கு முன்னர் திருமந்திரம் சாத்திர நூலாகத்திகழ்ந்தது – சேக்கிழார் பெருமான் புகழ்ந்து பாடிய அறுபத்து மூன்று நாயன்மார்களில் திருமூலரும் ஒருவராவார். திருமந்திரத்தில் தமிழர் சமயம், தமிழ் தத்துவங்கள் தமிழ் அறம் முதலியன பேசப்படுகிறது. எல்லாவற்றிக்கும் மேலாக யோகத்தின் சிறப்புக்கு இடம் கொடுக்கப்படுகிறது.

திருமந்திரம் இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தரும் தத்துவங்களைக் கொண்டு விளங்குகின்றது.

இக்கட்டுரையின் நோக்கம் திரு மந்திரத்தத்துவங்கள் புலம்பெயர் தமிழர் வாழ்வின் பணிகளுக்கு எப்படி வழிகாட்டலாக அமைந்தது என்பதை எனது அனுபவத்தின் ஊடாக ஆராய்வதேயாகும். தமிழர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து 1950,1960,1970ம் ஆண்டுகளில் மேலைத்தேச நாடுகளுக்கு முக்கியமாக இங்கிலாந்திற்கு மேல் பட்டப்படிப்பு படிப்பதற்காக வந்திருந்தார்கள். இலங்கையில் பிரபலமாக இருந்த டாக்டர்களும், அரசியலில் பிரகாசித்த பிரமுகர்களும், இங்கிலாந்தில் மேல் படிப்பு படித்தவர்களே இவர்கள் படிப்பு முடிந்ததும் தம் தாய்நாடு திரும்புவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். இதற்கு ஒரு காரணமும் இருந்தது. இங்கிலாந்தில் மேல்படிப்பு படித்து வந்த டாக்டர்களுக்கே அறிஞர்களுக்கோ இலங்கையில் பெருமதிப்பும் நல்ல எதிர் காலமும் இருந்தது. இவர்களுக்கு கோவில் கட்டி இங்கு வழிபட வசதிகள் செய்ய வேண்டும் என்ற எண்ணமே இருக்கவில்லை 1972ம் ஆண்டு மேல் பட்டப்படிப்புக்காக இங்கிலாந்துக்கு நானும் என் குடும்பத்தினரும் வந்தோம். அக்காலத்தில் இங்கு வழிபடுவதற்கு கோவிலும் இல்லை. பூசுவதற்கு திருநீறும் இல்லை. அப்பொழுது "அப்ரன்பாக் (Uptonpark)" என்னும் இடத்திலிருந்த அந்தோனியார் கோயிலே எங்களுக்குக் கோயிலாக அமைந்தது. திருமூலரின் " ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற தத்துவத்தின் வழி ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் சென்று வழிபட்டு வந்தோம், விசா பிரச்சனை ஆக இருந்தால் என்ன, பிள்ளைகளுக்கு நோய் வந்தால் என்ன, ஊரில் பிரச்சனைகள் வந்தால் கோயில் சென்று வழிபடுவதும் நேர்த்திக்கடன்கள் செய்து மனத்தைச் சமாதானப்படுத்துவது போல, இங்கும் அந்தோனியார் கோயிலுக்குப் போய் மெழுகுதிரி கொளுத்துவதும் நேர்த்திக்கடன் வைத்து ஏழு செவ்வாய்க்கிழமை தொடர்ந்து போய் வழிபடுவதுமாக இருந்தோம். அப்பொழுது எங்களுக்கு நாம் சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள், சிவன் முருகன் அம்மன், பிள்ளையார் முதலிய தெய்வங்களைத்தான் வணங்க வேண்டும் என்ற எண்ணமே இருக்கவில்லை. அந்தோனியார் கோயிலில் போய் அன்னை மேரியையும் யேசு கிறிஸ்த்துவையும் அந்தோனியாரையும் வணங்குவதில் மனம் அமைதி

அடைந்தோம். மற்றும் இங்கு வந்திருந்த தமிழர்களும் வோல்சிங்கம் கதிரைமாதா கோவில், பிரான்சில் இருக்கும் லூடஸ் மாதா கோவில் போன்றவற்றுக்குப் போய் இறைவழிபாட்டை நடத்தி வந்தார்கள். இது திருமூலரின்

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்

நன்றே நினைமின் நமன் இல்லை நாணாமே

சென்றே புகும் கதி இல்லை நும் சித்தத்து.

நின்றே நிலை பெற நீர் நினைத்து உய்மினே

என்ற பாடலுக்கு உதாரண வாழ்வாயிற்று. 1983ம் ஆண்டு இலங்கையில் நடந்த இனப் படுகொலையின் பின்னர் பெரும் தொகையான தமிழர்கள் தம் உயிர்க்கும் தம் குடும்பத்தின் உயிருக்கும் அஞ்சி இங்கிலாந்திற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் புலம் பெயரத் தொடங்கினார்கள். இவர்களுக்கு இங்கு ஏற்கனவே வந்து நிரந்தர வதிவுடமை பெற்று இருந்த தமிழர்கள் உதவி செய்தார்கள். இங்கும் திருமூலரின் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற கூற்றின்படி சாதிமத பேதமின்றி உதவி செய்தார்கள்.

மற்றும் திரு மூலரின் "அன்பே சிவம்" என்ற கூற்றின்படி இங்கு வசித்தவர்கள் இங்கு வந்தோருக்கு அரசாங்க சலுகைப்பணம் கிடைக்கு வரைக்கும் தம்மாலான உதவிகள் செய்தார்கள். அத்தோடு ஈழத்தில் இருந்த கஷ்டப்பட்டவர்களுக்கும் பணம் அனுப்பி அவர்களுக்கு ஆதரவு கொடுத்தார்கள். ஆச்சிரமங்களை அமைத்தும், ஆதரவு அளிக்கும் இல்லங்களை அமைத்தும் ஆதரித்து வந்தார்கள். அது மட்டுமல்ல இன்னமும் செய்து கொண்டே இருக்கிறார்கள். குடும்பத்தலைவனை இழந்து குடும்பப் பாரத்தைச் சுமக்கும் கைம்பெண்களுக்கு தையல் மெசின் , கோழிப்பண்ணை முதலியன வாங்கிக் கொடுத்து அவர்களை அன்று முதல் இன்று வரை ஆதரித்து வருகிறார்கள். இது எல்லாம் திரு மூலரின் "அன்பே சிவம்" என்ற வழிகாட்டலில்தான் நடந்தது இன்னமும் நடக்கின்றது.

எத்தனையோ இளம் வாலிபர்கள் இளம் யுவதிகள் தமிழ் பற்றுக்காரணமாகத் தம் இனிய உயிரை அர்பபணித்திருக்கிறார்கள். இவர்கள் தம் உயிரின் மேலாக தமது நாட்டையும் நேசித்ததின் காரணமாக இப்படிச் செய்தார்கள். இதுவும் திருமூலரின் அன்பே சிவம்" என்ற உண்மையின் அடிப்படையில் தான் நடந்திருக்கின்றது.

இது மட்டுமல்லாமல் கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம என்ற கொள்கையின் படி ஊருக்கு ஒரு கோயில் கட்டி வாழ்ந்த தமிழர்கள் இலண்டனுக்கு வந்த பொழுது வழி படுவதற்கு கோயில் என்று தம் தம் வீடுகளிலேயே சுவாமிப் படங்களை வைத்து வழிபட்டு வந்தார்கள் இவர்களில் முதன்மையானவர் திரு சபாபதிப்பிள்ளை என்னும் பெரியார். இவர் தமது வீட்டிலே ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப் பிராத்தனை நடத்தி வந்தார். இங்கு வந்தது வழிபட்ட அன்பர்கள் பலர் சேர்நது இலண்டனில் மற்றைய இடங்களில் வாழும் தமிழர்களும் வந்து வணங்க ஒரு கோயில் தேவை என்று கருதி அவர்கள் எல்லோரின் மேலுள்ள அன்பின் காரணமாகவே திரு சபாவதிப்பிள்ளை தலைமையில் கை கேற் முருகன் கோயில் High Gate என்னும் இடத்தில் சிறிய அளவில்

தொடங்கப்பட்டது.இதைத் தொடர்ந்து கிழக்கு லண்டனில் இருந்த தமிழ் அன்பர்கள் பிளசர்ட் Plashet school ஒவ்வொரு மாதம் வெள்ளிக்கிழமை ஒன்று கூடி கூட்டுப்பிராத்தனை செய்து வந்தார்கள். இதுவே இலண்டன் சிறீமுருகன் கோவிலுக்கு அத்திவாரமாக அமைந்தது சிறிய கோயில்களாகத் தொடங்கி, இவ்விரு கோயில்களும் காலப் போக்கில் பிரமாண்டமான கோயில்களாகத்திகழ்கின்றன. இவ்விரு கோயில்களைத் தொடந்து ஊருக்கு ஒரு கோயிலாகக் கட்டப்பட்டு இறை வழிபாடு இலண்டனில் எல்லாப் பகுதிகளிலும் நடை பெறுகிறது. இன்றும் சிலர் தத்தமது வீடுகளில் இருந்த படியே தமது இஷ்டதெய்வத்தை பிரார்த்தனை செய்கிறார்கள். இது திருமூலரின்

''செல்லும் மவுனம் செலுத்துமின் சிந்தையை

வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை

இல்லை எனினும் பெரிதுலம் எம் இறை

நல்ல அரன் நெறி நாடுமின் நீரே''

என்பதற்கு உதாரணமாக அமைவதைக் கூறலாம்.

வாழ்வு என்னும் கடலுள் மூழ்காது நீந்தபடபழகுவதே நாம் எமக்குச் செய்யும் சிறந்த தொண்டெனலாம். இதை வடிவாகத் திரு மூலர் பின்வரும் பாடலால் சொல்லுகிறார்,

''இக்காயம் நீங்கி இனி ஒரு காயத்தில்

புக்குப்பிறவாமல் போம்வழி நாடுமின்

எக்காலத்து இவ்வுடல் வந்தெமக்கு ஆனது என்று

அக்காலம் உன்ன அருள் பெறலாமே''

அதாவது இப்பொழுது உள்ள உடம்பை விட்டு உயிர் நீங்கி இன்னொரு உடலில் பிறந்து இறக்காமல், இறைவனுடன் தாடலையாகப் பொருந்தும் வழி தேடுங்கள். எம்முடைய உடல் உடல் எக்காலத்து எமக்கு வந்தது என்று சிந்தித்தால் வினைப்பயனை அனுபவிப்பதற்காக இறைவன் நமக்குத் தோற்றுவித்த காலத்து என்பது புரியும். எனவே வினைப்பயன்களை அதிகரிக்கும் வாழ்வு வாழாது இறைவனோடு ஒன்றிக்கும் வாழ்வு வாழ்ந்து அவன் அருள் பெறுவதே முத்திக்கான வழி என்பது திருமூலர் திருமந்திரம். அவ்வழி தலைமேற்கொண்டு வாழ இறைவன் அளிக்கும் பட்டயம் திருமந்திரமும் வாழ்வியலும் பட்டயம்.

# திருமந்திரத்தில் உள்ளம் உடல் உயிர் சார்ந்த கருத்துக்கள் குறித்த பார்வை

திருமதி காந்திமதி சூரியக்குமார்



உலக மக்கள் நல்லறிவுடன் நல்வாழ்வு வாழ்வதற்கு முன்னோர் கண்ட சிந்தனைகளே தத்துவங்களாகும். திருமூலர் திருமந்திரத்தினூடாக உலக சமுதாயம் நன்மையடைவதற்காக பலநற் தத்துவங்களை தந்திரங்களாகப் பிரித்து அதில் என்பு, அறம், இசை அட்டாங்கயோகம், போன்ற பலவற்றை அறிவுறுத்தி எடுத்தாண்டுள்ள நாம் இன்று 21ம் நூற்றாண்டில் பல இன்னல்களின் மத்தியில் பலவிதமான மனச்சஞ்சலங்களுடன் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்து வருகிறோம். இதனால் மன உழச்சல்களும். மன அழுத்தங்களும் எங்களையும், இளஞ்சமுதாயத்தினரையும் வாட்டி வதைக்கிறது.

எங்கள் சமயத்தில் உள்ள தேவாரத்திருமுறைகள், திருவாசகம் திருமந்திரம் என்பனவும், திருக்குறள், இலக்கியங்கள், காப்பியங்கள் போன்றவற்றினூடாக எமது இளஞ்சமுதாயத்தை நல்லொழுக்கத்துடன் வாழ வழிவகுத்துக் காட்ட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் புலம் பெயர்ந்த மண்ணில் புத்திசாலிகளாக அறிவாற்றல் உடையவர்களாக இருந்தாலும் மெஞ்ஞான அறிவில்லாமல் வாழுவதை காணக்கூடியதாக உள்ளது. இதனால் அவர்கள் பல இன்னல்களுக்குள் தள்ளப்பட்டு அதில் தடுமாறுவதையும் பார்க்கக்கூடியதாக உள்ளது. இதனால் அவர்களுக்கு உண்டாகும் மன அழுத்தங்கள் பலவிதமான வேலைப்படுவையும், மனச்சாந்தி இன்மையும் ஏற்படுத்துகின்றன.

நம்முன்னோர் வாழ்ந்த வாழ்க்கை முறை, சமய நெறிமுறைகள் இலக்கியங்கள், காப்பியங்கள் போன்றவற்றின் அறிவு அவர்களை தமிழ் சைவர்களாக மாற்றி நல்லொழுக்கத்துடன் வாழ வழிவகுக்கும். தேவாரத் திருமுறைகள் பண்ணினால் மனத்தை வளப்படுத்தும். திருமந்திரம் என்னும் சைவ ஆகமம் தமிழ் எளிய நடையில் உள்ளது. இதில் காட்டப்படும் அட்டாங்க யோகம், சித்தர் நெறிகள் உடலைப்பற்றிய அறிவு போன்றவை இவர்களுக்கு இப்போதைய நிலையில் சாலச் சிறந்தது. இவை மனதை வளப்படுத்தி, உடலை உறுதி செய்து உள்ளத்தை வலிமையாக்கும். சமகாலத்தில் மன அழுத்தத்துடன் வேறு பல நோய்களுக்குள்ளும் தள்ளப்படும் இளம் சமுதாயத்தினருக்கு திருமந்திரத்தில் உள்ள உடல், உள்ளம், உயிர் சார்ந்த சிலவற்றை எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே திம.724

இதில் உடம்பு அழிந்துவிட்டால் உயிர் அங்கிருந்து நீங்கிவிடும் என்றும், வீடு பேற்றை அடைவதற்கு மெஞ்ஞானத்தை உறிவதற்கு உயிர் இல்லாமல் உடன்பால் மட்டும் உணரமுடியாது. ஆகவே உயிரைக் காப்பதற்கு உடம்பைப் பேணிப்பாதுகாக்க வேண்டும். இதற்கு நல்ல உணவுமுறை, அட்டாங்கயோகத்தில் பிராணயாமப் பயிற்சிமுறைகள், ஆசனப்பயிற்சி முறைகள், தியானப்பயிற்சி முறைகள் சாலச்சிறந்தன. நல்ல தேகாரோக்கியத்தைப் பெற உடல்ப்யிற்சிகள் உற்சாகத்தை ஊட்டி மனச் சோர்விலிருந்து நீக்க உதவும். இவ்வாறு உடம்பை வளர்த்து உயிரை வளர்க்கிறேன் என்றார் திருமூலர்

உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்துேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்.
உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடலினை யான் இருந்து ஒப்புகின்றேனே (தி.ம.725)

உடம்பு ஓர் அழியும் பொருள். இது தேவையற்றது. இது ஊனினால் ஆனது. ஆகவே இது ஒரு இழுக்கானது என்று நினைத்தேன் இறைவன் எம்முள் இறைந்து ஒளிவடிவாக திகழ்கிறான் இறைவன் எனக்குள் இருந்து என்னை இயக்குகிறான் என்று அறிந்த பின் இந்த உடம்பாவிய கோயிலை பாதுகாத்து வருகின்றேன் என்கிறார். உடம்பும் இதனின்று வெளியேறும் கழிவுகளும் இயற்கையானவை. இவை அசுத்தம் போல் இருப்பதால் அதை ஓர் இழுக்காகப் பார்த்தேன் (எச்சில், சிறுநீர், இரத்தம், வியர்வை, சுக்கிலம், சுரோணிதம் எல்லாம் உடலில் காணப்படும் அல்லது வெளியேற்றப்படும் கழிவுகளாகும்)

யோக சமாதியில் இறைவனோடு ஒன்றித்து வாழ்வதற்கு உடம்பு தேவைப்படுகிறது அதனால் உடம்பினை போற்றுகின்றேன் என்கிறார்.

உள்ளம் பெரும் கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிவார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

(தி.ம. 1823)

உள்ளம், மனம், வாய், சீவன், புலன்கள் ஐந்து என்று இறைவன் உறையும் இடங்களாகக் கூறுகிறார். பரம்பொருளை சென்று வழிபடுவதற்கு வாய்தான் கோபுரவாசல் என்றும், அறியாமை அகற்றி தெளிவான ஞானத்தைப் பெற்ற மனநிலை அடைந்தவர்க்கு சீவன் சிவனாக் சிவலிங்கமாக வழிபடத்தக்க உயிராகும். ஐம்புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிவை மனதை அலைபாயச் செய்து அடக்கமுடியாமல் இருப்பதால் கள்ளமான உடலுக்கு வஞ்சகமானவை என்று கள்ளப்புலன்களாக கோவிலில் காணப்படும் ஐந்து மணிவிளக்குகளாக கருதப்படுகிறது. உள்ளத்தை கோவிலாக இறைவனை வழிபடும் இடமாக கருதிப் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்கிறார்.

ஞானிக்கு காயம் சிவமே தனுவாகும்
ஞானிக்கு காயம் உடம்பே அதுவாகும்
மேல் நிற்கும் யோகிக்கு விந்துவும் நாதமும்
மோனிக்கும் காயம் முப்பாழ் கெட்டே முத்தியே (தி.ம. 2135)

சிவனையே சிந்தித்திருக்கும் சிவஞானிக்கு தனுவாகிய உடம்பே சிவமாகும். ஞான நெறியில் திகழும் மெஞ்ஞானிகளுக்கு உடம்பு சிவமயமாகும். யோக நெறியில் தம்மை மறந்து தியானத்தில் இருக்கும் யோகிகளுக்கு உடம்பு ஒளியாகவும் ஆஞ்ஞாச்சக்கரமாகிய புருவமத்தியில் ஏற்படும் அதிர்ச்சி ஒலியாக – நாதமாயும், அட்டாங்க யோகத்தின் மோனநிலையில்.

இருப்பதற்கு ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் கெட்டு அழிந்து முத்தி இன்பத்தைக் கொடுக்கும் ஆதலால் இந்த உடம்பைப் பாவித்துத்தான் சிவானுபவத்தைப் பெற முடியும். ஆகவே உடம்பை பேணித்தான் இந்த இறையனுபவத்தை அடைய முடியும்.
உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி

உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்பொரு உயிரிடை நட்பறியாதவர்
மடம்புகு நாய்போய் மயங்குகின்றாரே (தி.ம 2148)

